பக்கங்கள்: பதினாறு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆனி 09 செவ்வாய்க்கிழமை (23.06.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 209

# அரசுடன் கூட்டா, தனித்தா?

# ஈ.பி.டி.பி. இன்று அறிவிப்பு!

## நேற்றிரவு கட்சியின் மத்திய குழு ஆராய்வு

கொழும்பு, ஜூன் 23

வட்டக்கில் வவுனியா நகரசபை மற்றும் யாழ். மாநகரசபை ஆகியவற்றுக்கான தேர்தல்களில் அரசின் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இணைந்து கூட்டாகப் போட்டியிடுவதா அல்லது தனித்துத் தமது கட்சியின் பெயரிலேயே களத்தில் இறங்குவதா என்பது குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி இன்று முற்பகல் அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த விடயம் குறித்துத் தீர்மானிப்பதற்காக அக்கட்சியின் மத்திய குழு நேற்றிரவு கூடவிருந்தது.

மேற்படி இரு உள்ளூராட்சி சபைகளுக்குமான வேட்பு மனுத் தாக்கல் செய்வது நாளை 24 ஆம் திகதி மதியத்துடன் முடிவடைகின்றது.

இத் தேர்தல்களில் அரசுக் கூட்டமைப்புடன் சேர்ந்து போட்டியிடுமாறு அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி. கட்சிக்கு அரசுத் தலைமை (16 ஆம் பக்கம் பார்க்க)

## பன்றிக் காய்ச்சல்; 5 ஆவது நோயாளி இனங்காணப்பட்டார்

கொழும்பு, ஜூன் 23

இலங்கையில் பன்றிக் காய்ச்சல் தொற்றுக்கு இலக்கான ஐந்தாவது நோயாளி நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

ஆஸ்திரேலியாவில் மெல்போன் நகரிலிருந்து சிங்கபூர் ஹெயாலயின்ஸ் விமானத்தின் ஊடாக இலங்கைக்கு வந்த பத்தரமுல்லையை சேர்ந்த 9 வயது சிறுமி பன்றி காய்ச்சல் தொற்றுக்கு இலக்காயிருந்ததாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (அ-சி)

## உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள்: விசேட பாதுகாப்புக்கு ஏற்பாடு

கொழும்பு, ஜூன் 23

ஊவாமாகாண சபை மற்றும் யாழ். வவுனியா உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் தொடர்பில் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

வேட்பு மனுக்கள் ஏற்கப்படும் இறுதித் திகதிவரை ஊர்வலங்கள் செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்படுகிறது.

ஊவா மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பான வேட்பு மனுக்கள் நாளை நண்பகல் 12 வரை ஏற்கப்பட உள்ளதோடு யாழ். மற்றும் வவுனியா உள்ளூராட்சி சபைத் தேர்தல்களுக்கான வேட்பு மனுக்கள் நாளை மறுதினம் (16 ஆம் பக்கம் பார்க்க)

**உள்ளே**

ஜி.சி.ஈ உயர்தர மாணவர்களுக்கான 4 பக்கங்களில் மாதிரி வினாத்தாள்கள்

**நாளை**

ஆசிரியர் - பொன்.சக்திவேல் தொகுத்து வழங்கும் இலகுவழி ஆங்கிலம்

## காயமுற்ற புலி உறுப்பினர் எவரையும் இராணுவத்தினர் கைது செய்யவில்லை

### இயக்கத்தினரே சுட்டுக் கொன்றதாகக் கூறுகிறார் இராணுவத் தளபதி

கொழும்பு,ஜூன் 23

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போரின்போது படையினர் நடத்திய தாக்குதல்களில் காயமடைந்த புலி உறுப்பினர்கள் எவரையும் படையினர் கைதுசெய்யவில்லை அவர்கள் (16 ஆம் பக்கம் பார்க்க)

## நலன்புரி நிலையங்களில் உள்ளவர்களில் 4,000 பேர் கண் தொடர்பான நோய்களால் பாதிப்பு

### பொதுச் சுகாதார பிரதிப்பணிப்பாளர் தகவல்

வவுனியா, ஜூன் 23

வவுனியா நலன்புரி நிலயங்களில் தங்கியுள்ளவர்களில் 4,000 பேருக்கும் அதிகமானோர் கண்ணோடு சம்பந்தப்பட்ட நோய்களால் பாதிப்புற்று இருப்பதாக பொதுச் சுகாதரப்பிரிவின் பிரதிப்பணிப்பாளர் டாக்டர் பாலிதமஹிபால தெரிவித் துள்ளார்.

பி.பி.சி. செய்திச் சேவையின் 'சந்தேசிய' சிங்கள சேவைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இத் தகவலை வெளியிட்டுள்ளார். அதன்போது அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

(16 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண மாநகரசபைத் தேர்தல் களத்தில் ஐ.தே.க. முதலாவதாக வேட்பாளர்களை இறக்கியது

### அனைவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள்; நால்வர் பெண்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ். மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஐக்கிய தேசியக்கட்சி 4 பெண் வேட்பாளர்களைக் களமிறக்கியுள்ளது. இவர்களுடன் மேலும் 25 வேட்பாளர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் பட்டியல் மூலம் தேர்தல் களத்தில் இறக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியே வேட்பு மனுவை முதலாவதாகத் தாக்கல் செய்திருக்கிறது. அதன் அதிகாரமளிக்கப்பட்டுள்ள முகவராக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன (16 ஆம் பக்கம் பார்க்க)

### கோத்தபாய கொலை முயற்சியில் சம்பந்தப்பட்ட

## பயங்கரவாதச் சந்தேக நபர் தாக்கப்பட்டார் என முறையீடு

கொழும்பு, ஜூன் 23

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவைக் கொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சியுடன் சம்பந்தப்பட்டவர் எனச் சந்தேகிக்கப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, பயங்கரவாதத் தடைச்சட்ட விதிகளின் கீழ் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட தமிழ் இளைஞர் ஒருவர் தாம் விசாரணைகளின் (16 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த 9,247 முதியவர்கள் சமூகசேவைகள் அமைச்சிடம்

### வவுனியா, மன்னார் அலுவலகங்களில் தொடர்பு கொண்டு பொறுப்பேற்க கோரிக்கை

கொழும்பு, ஜூன் 23

வவுனியா நலன்புரி நிலையங்களிலும் நிவாரணக் கிராமங்களிலும் தற்காலிகமாக வாழ்ந்து வருகின்ற 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் 9,247 பேர் நேற்று சமூக சேவை கள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களைப் பொறுப்பேற்று பராமரிக்க விரும்பும் உறவினர்கள் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் வவுனியா, மன்னார் பணிமனைகளில் தொடர்பு கொண்டு பொறுப்பேற்க முன்வருமாறு சமூக சேவைகள் அமைச்சு (16 ஆம் பக்கம் பார்க்க)



டயலொக் CDMA இப்போது யாழ்ப்பாணத்தில்

டயலொக் CDMA முற்கொடுப்பனவு இணைப்பு ரூ. 5999/- மட்டுமே

- இலவச IDD இணைப்பு
- செக்கன் அடிப்படையிலான கட்டணங்கள்
- ஆரம்பக் கட்டணம் எதுவுமில்லை
- ரீலோட் செய்யும் வசதி

Dialog

Fixed Line

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அகவை அறுபதில் அகங்குளிர வாழ்த்துகின்றோம்



யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியிற் புகழ்பூத்த தமிழாசிரியராக விளங்கி 22.06.2009 இல் ஓய்வுபெறும்

## திருமதி விக்னேஸ்வரி சந்திரசேகரம்

ஆசிரிய சேவைக்காலம் 01.06.1979 22.06.2009
இந்துவில் சேவைக்காலம் 01.01.1989 22.06.2009

ஏற்றமாம் இந்துவில் இலங்கு நல்லாசானாய்
போற்றரும் தமிழ்ப் பாடக்குழு இணைப்பாளராய்
விளையாட்டுக் குழுவின் விளங்கு உறுப்பினராய்
முகாமைத்துவக் குழுவின் முதன்மை அங்கத்தவராய்
ஒழுக்காற்றுச் சபையின் உயர் உறுப்பினராய்
பகுதித் தலைவராக பகர் சேவையாற்றிய
இருபது ஆண்டுகள் இயம்புதல் எளிதோ?
வளம் பல பெற்று வாழ்க நீடூழி!

திரு. திருமதி சந்திரசேகரம் தம்பதியினர் மாணவர் நலன் கருதி புலமைப் பரிசில் நிதியம் ஒன்றினைத் தமது பிறந்த தினத்தன்று ஆரம்பித்து இந்து அன்னையைக் கௌரவித்தமையை மனமார வாழ்த்துகிறோம்.

ஆசிரிய சகோதரத்துவம்,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

## தேவை

போட்டோக் கொப்பி, கணனி இயக்கத் தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.
தொடர்பு: 45A, ஆஸ்பத்திரி வீதி, திருநெல்வேலியில் உள்ள ஷெல்லி சென்ரில் நேரில் தொடர்பு கொள்ளவும்.
தொ.பே:- 0778064054

## தவறிவிட்டது

பெருமாள் கோயிலடியைச் சேர்ந்த அருளானந்தம் மரியதாஸ் என்பவரது ஆள் அடையாள அட்டை இல.481322658X 10.06.2009 அன்று திருநெல்வேலி சந்தையில்தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கம்சா தேநீர் கடை, சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் ஒப்படைத்துதவவும்.

## தவறிவிட்டது

34, செட்டித்தெரு, நல்லூரைச் சேர்ந்த ஆறுமுகசுவாமி தனராஜ் ஆகிய எனது 903472464V, இலக்கமுடைய தே.அ. அட்டை, ATM அட்டை, சிம் என்பன கச்சேரி நல்லூர் வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தோர் தயவு செய்து 0776141102 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## கண்ணீர் அஞ்சலி



சென்.ஜோன்ஸ் கல்லூரி
2009 A/L கணிதப் பிரிவு
மாணவன் மகேந்திரன்
சாருஜனின் அன்புச்
சகோதரன்

### மகேந்திரன் சசீந்திரன்

நேற்று (22.06.2009) திங்கட்கிழமை அகால மரணமடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைகிறோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த் திக்கின்றோம்.

2009 A/L கணிதப் பிரிவு மாணவர்கள்,
சென்.ஜோன்ஸ் கல்லூரி.

## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

தேசிய பாடசாலைகளுக்கான
தரம் ஒன்று அனுமதி- 2010

2010 ஆம் ஆண்டில் தரம் ஒன்றில் பிள்ளைகளின் அனுமதிக்காக விண்ணப்பங்கள் யூலை 15ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் படிவங்களை கல்லூரியின் காரியாலய நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

அதிபர்.

# மரண அறிவித்தல்கள்

## மயிலு சங்கரப்பிள்ளை

(சைவசித்தாந்த பண்டிதர், கந்தபுராண புராணிகர்)



துன்னாலை மத்தி, கோவிற்கடவையைச் சேர்ந்த மயிலு சங்கரப்பிள்ளை நேற்று முன்தினம் (21.06.2009) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மயிலு - பார்வதி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கற்பகத்தின் அன்புக் கணவரும் ஞானவதி, குகதாசன் (பிரான்ஸ்), விமலாவதி ஆகியோரின் அன்புத் தந்தையும் அருளானந்தமூர்த்தி (ராமுகடை, அரசடி), இன்பராணி(பிரான்ஸ்), பாலேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் கலைக்கௌரி, நித்தியா, நித்தியன் (பிரான்ஸ்), சோபனா(பிரான்ஸ்), சோபிதா, கார்த்தீகன், கார்த்தீபன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23.06.2009) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக வேரகொண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மருமக்கள்
(அருளானந்த மூர்த்தி, பாலேந்திரம்).

## செல்லையா சந்திரசேகரம் (செல்லையா மில் உரிமையாளர்)



யாழ்ப்பாணம் 345 (563), காங்கேசன் துறை வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சந்திரசேகரம் 21.06.2009 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் செல்வகுமாரியின் அன்புக் கணவரும் பரமேஸ்வரி (லண்டன்), காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் கனகசபை (கனடா), காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் இராயேஸ்வரி, சண்முகராஜா ஆகியோரின் சகோதரரும்காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் பொற்கொடி, புவனேஸ்வரி, கோபாலகிருஷ்ணன், கணேசானந்தராஜா, விஜயராணி, உருத்திரகுமார், சோதிராசா, வசந்தகுமாரி, குசலகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.06.2009) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.30 மணியளவில் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

351, (573) காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

# 26 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண் உலகில்
16 - 04 - 1947



விண் உலகில்
23 - 06 - 1983

## திருமதி இராஜேஸ்வரி சிவராஜா (மண்டைதீவு - 6)

அன்பே உருவாய் பாசத்தின் உறைவிடமாய்
எம்மை அன்போடு பெற்றெடுத்து
பாசத்தோடு அரவணைத்து எமக்கு அமுதூட்டி அறிவூட்டி
அறநெறியில் உயர் நிலையில்
நாம் வாழ வழியெல்லாம் காட்டி வைத்து
அன்பு என்ற சொல்லுக்கே அணிகலனாய் வாழ்ந்த
எங்கள் அன்புத் தெய்வத்தை
என்றுமே நாம் மறவோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய என்றென்றும் இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி!! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!!

61 /25 மில் லேன்,
பிரம்படி, கொக்குவில்.

என்றும் நினைவுடன்
குடும்பத்தினர்.

## பூவோடை இந்து மயானத்தில் சிரமதானப் பணி

இணுவில், ஜூன்23

வலி. தெற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட இணுவில் பூவோடை இந்து மயானம் இன்று செவ்வாய்க்கிழமை சிரமதானப் பணிமூலம்துப்புரவு செய்யப்படவுள்ளது.

வலி. தெற்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் மயான அபிவிருத்திச் சபையும் பிரதேசத்தில் உள்ள பொது அமைப்புக்களும் இணைந்து சிரமதானப் பணியை மேற்கொள்ளவுள்ளனர்.

(203-45)

# கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்

## அருட் தந்தை மரியாம்பிள்ளை நோபேட்



மக்கள் சேவையே மகேசன் சேவை என்பதிலும் இறைபணி என்பது இறைவனின் சித்தத்தை நிறைவேற்றுவதே என்பதிலும் மக்களுக்காக மக்களோடு வாழ்ந்து உறுதியுடன் இறுதிவரை போராடி மறைந்த எமது முன்னாள் பங்குத் தந்தை வண பிதா மரியாம்பிள்ளை நோபேட் அவர்களின் திடீர் மரணம் எம்மையெல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த் தினாலும் இறைவன் தனது பணியாளனுக்கு வான் வீட்டில் இடமளிப்பார் என்பதில் ஆறுதல் அடைகின்றோம்.

பிரிவால் துயருறும்
அமலோற்பவ மக்கள் மன்றம்,
ஒட்டகப்புலம்.


# அன்னை புத்தகசாலை

இல.7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 222 9881

1 ஆவது ஆண்டு பூர்த்தி

எமது வளர்ச்சிக்கு ஊக்கமளித்த வாடிக்கையாளர்கள், கல்விச் சமூகத்தினர் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

♦ உங்களுக்கு தேவையான சகல வெளியீட்டு நூல்கள் இலங்கையில் எப்பாகத்தில் இருந்தாலும் 72 மணித்தியால Speed marketing மூலம் பெற்றுத் தரும் ஒரே நிறுவனம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## அதிகாரப் பகிர்வுத் திட்டம் 'அவுட்'?

தெற்கிலிருந்து எழுந்துள்ள மூன்று குரல்கள் - கருத்துக்கள் - இன்று அவசரமாகவும், அவசியமாகவும் நோக்கப்பட வேண்டியவையாக உள்ளன.

ஒன்று - ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க கூறியது. *"அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த முயன்றால் அது தமிழர்களையும், முஸ்லிம்களையும், சிங்களவர்களையும் தனித் தனியே பிரித்து மீண்டும் அத்தரப்புகள் இடையே போராட்டம் ஒன்றுக்கே வித்திடும். அதனால் அந்தத் திட்டத்தை முழு மூச்சாக எதிர்ப்போம்."* - என்கிறார் அவர்.

அடுத்தது - தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் வண. தம்பர அமில தேரர் கூறிய கருத்து. *"பிரிவினைக்கு இடமளிக்கும் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசு முனையுமானால் - முயலுமானால் - எமது உயிரைப் பணயம் வைத்து, எந்தத் தியாகத்தையும் செய்து, அத்துரோகத்தனத்தை முறியடிக்கத் தயங்கமாட்டோம்"* - என அமில தேரர் கூறியிருக்கின்றார்.

மூன்றாவது கருத்து - விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழிப்பதில் வெற்றிகண்ட 'மாவீரர்' எனத் தென்னிலங்கையால் போற்றப்படும் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா கூறியது. *"வடக்கு மாகாணத்திற்கு விசேட அரசியல் தீர்வு ஏதும் அவசியமில்லை. படையினர் தியாகம் செய்து பெற்ற வெற்றியை அரசியல் தீர்வு என்ற பெயரில் காட்டிக் கொடுக்கக் கூடாது."* - என்று உபதேசம் செய்திருக்கின்றார் அவர்.

அவர் கூறிய இந்தக் கருத்து, அரசியல் தலைவர்களுக்கான ஆலோசனையா, உபதேசமா, வழிகாட்டலா அல்லது பணிப்புரையா என்பது தெரியவில்லை.

ஆனால் அரசியல் தலைமைத்துவம் கையாள வேண்டிய விவகாரங்களை இராணுவத் தலைமை தனது கையில் எடுக்கும் இந்தப் போக்கு ஆரோக்கியமானதல்ல என்பது மட்டும் உண்மை.

இராணுவத் தளபதியின் இந்தக் கருத்து சில சமயங்களில் அரசுத் தலைமையின் கருத்தைப் பிரதிபலிப்பதாகவும் இருக்கலாம். சில சமயம் முரண்படுவதாகவும் இருக்கலாம். ஆனால் விடுதலைப் புலிகள் இயக்கம் என்ற எதிரியை அழிப்பதற்காகக் கட்டுமட்டில்லாத அளவுக்கு வலுப்படுத்தப்பட்டிருக்கும் இலங்கையின் இராணுவக் கட்டமைப்பின் தலைமையிடமிருந்து தமிழ் மக்களுக்குத் தீர்வு ஒன்று அவசியமா, இல்லையா என்ற சர்ச்சை கிளப்பப்படுவது நல்ல சகுனம் அல்ல என்பதைச் சுட்டிக்காட்டுவது பொருத்தம்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழ் வடக்கு, கிழக்குத் தமிழர்களுக்கு அற்ப, சொற்ப அதிகாரங்கள் பெயரளவிலேனும் - வெறும் சட்டக் கடதாசிகளிலேனும் - பகிரப்பட்டுள்ளன என்பது உண்மைதான். அவை, தமிழர்களின் நீதி, நியாயமான எதிர்பார்ப்பாக அமையும் அபிலாஷைகளை நிறைவு செய்யாவிட்டாலும் கூட, அவற்றில் அதிகாரப் பகிர்வு குறித்து பிரஸ்தாபிக்கப்படுகின்றது என்பது மறுக்கப்படக் கூடியதல்ல.

அரசமைப்பின் இந்த 13 ஆவது திருத்தம் ஒன்றும் புதிதாகக் கொண்டுவரப்படும் ஒரு விடயமும் அல்ல. இருபத்தியொரு ஆண்டுகளுக்கு முன்னரே இலங்கையின் உயர் சட்டம் என மதிக்கப்படும் அரசமைப்பில் உரிய சட்ட வழிகளில் சேர்த்துக்கொள்ளப்பட்ட திருத்தமே அது.

அந்த உயர் சட்டத்தில் இருப்பதை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதன் மூலம் அரசமைப்பையே கேலிக்கு உள்ளாக்கி, மிதித்து வந்துள்ளன இதுவரை ஆட்சிக்கட்டில் இருந்து வந்த அரசுகளும், அதிகார மையங்களும்.

நாட்டின் உயர் சட்டத்தில் இருப்பதை நடைமுறைப்படுத்த வேண்டியது அரசுகளின் முக்கிய கடமையும் பொறுப்புமாகும்.

அத்தகைய அரசமைப்பு ஏற்பாடுகளை - அமுலில் உள்ள யாப்பின் பிரிவுகளை - நடைமுறைப்படுத்தக் கூடாது என்கிறார் ஒரு கட்சித் தலைவர். உயிரைத் தியாகம் செய்தாவது அதை நடைமுறைப்படுத்துவதைத் தடுப்போம் எனச் சூளுரைக்கிறார் ஒரு மதத் தலைவர்.

அந்த யாப்பில் உள்ள அதிகாரப் பரவலாக்கலை, யாப்புக்கு அமைய நடைமுறைப்படுத்துவதைக் கூட இராணுவத் தளபதியின் கருத்து எதிர்க்கின்றது. இந்தவகையில் பார்த்தால் இராணுவத் தளபதியின் கருத்து அரசமைப்பு ஏற்பாடுகளுக்கு விரோதமானது என்றும் கூட அர்த்தப்படுத்தக்கூடியதாகும்.

விடுதலைப் புலிகளை வெற்றிகொண்ட பின்னர், தெற்கில் அதன் அரசுத் தலைமையிடமிருந்து வடக்கின் அபிவிருத்தி பற்றியே அதிகம் பேச்சு வெளிப்படுகின்றது. அதிகா ரப் பரவலாக்கம், சிறுபான்மையினரின் அபிலாஷைகளை நிறைவுசெய்தல், தீர்வு யோசனைகள் போன்றவை குறித்தெல்லாம் அமுக்கி வாசிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் மறுபக்கத்தில் பௌத்த - சிங்களத் தீவிர அமைப்புகள் மற்றும் இராணுவத் தலைமைகளிடமிருந்து அதிகாரப் பரவலாக்கம் என்ற விடயமே அர்த்தமற்றது, அபத்தமானது என்ற சாரப்பட முன்வைக்கப்படும் தீவிரப் போக்குக் கருத்துக்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் பேச்சு பகிரங்கமாக வெளிப்படு கின்றது.

இவை, விடுதலைப் புலிகளின் அழிவு பற்றிய அரசின் அறிவிப்போடு சிறுபான்மையினரான தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கும் திட்டமும் எண்ணமும் கூட செத்துப்போய்விட்டன என்ற கருத்தில் தென்னிலங்கை இருக்கின்றமையையே எடுத்துக்காட்டுகின்றன.

# குடாநாட்டின் கல்வி அபிவிருத்தி தொடர்பான உயர்மட்ட மாநாடு நாளை யாழ்ப்பாணத்தில்

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கலந்துகொள்வார்

யாழ்ப்பாணம், ஜூன்.23

யாழ்.குடாநாட்டின் கல்வித்துறை சார்ந்த உயர்மட்ட மாநாடு ஒன்று நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு சமூக சேவை கள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் யாழ். அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இந்த மாநாட்டில் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

கல்வித்துறை சார்ந்த பல்வேறு மட்டத்தினருடனான சந்திப்புக்களும் நாளை சமூக சேவைகள் அமைச்சின் யாழ்.அலுவலகத்தில் நடைபெறவுள்ளன.

நாளை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும் உயர்மட்ட மாநாட்டில் பாடசாலைகளின் குறைபாடுகள், தேவைகள், நியமனங்கள் மற்றும் இடமாற்றங்கள், ஆளணிப் பற்றாக்குறைகள், மாணவர்களின் தேவைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளன.

இதேவேளை மாகாண ஆசிரியர் சேவையில் இரண்டாம் கட்டப் பட்டியலில் நியமனங் கிடைக்காத பட்டதாரிகளுக்கான சந்திப்பு நாளை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் இரண்டாம் கட்டப் பட்டியலில் நியமனம் கிடைக்காத குடாநாட்டுப் பட்டதாரிகளைக் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன் 9மணிக்கு தொண்டர் ஆசிரியர்களுடனான விசேட சந்திப்பும் இடம்பெறவுள்ளது.

தொண்டர் ஆசிரியர்கள் அனைவரையும் இதில் கலந்துகொள்ளுமாறு சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50-203)

# தமிழ் மக்களிடையே தொடரும் அச்சநிலையை நீக்குவதற்கான நடவடிக்கைகளே இப்போது அவசியம்

## நேற்று யாழ்.வந்த ஜயலத் எம்.பி.தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூன், 23

தமிழ் மக்கள் இன்னும் அச்ச நிலையிலேயே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இந்த நிலையை நீக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். இதற்காக ஐக்கிய தேசியக் கட்சியும் தேசியக் கட்சி என்ற ரீதியில் இந்தத் தேர்தலில் போட்டியிட வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் ஐ.தே.கவின் அதிகாரமளிக்கப்பட்ட முகவராக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன.

யாழ்.மாநாகர சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்பு மனுவைத் தாக்கல் செய்வதற்காக நேற்று யாழ்ப்பாணம் வந்த அவர் யாழ்.செயலகத்தில் மனுவைத் தாக்கல் செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

அவர் அங்கு தெரிவித்தவை வருமாறு:

யாழ்.மாநகர சபைக்கான தேர்தல் சுதந்திரமான முறையில் நடைபெறுமா? இல்லையா? என்பதை எம்மால் இப்போது கூறமுடியாது. நாம் அமைதியான முறையில் அனைத்தையும் அவதானித்துக் கொண்டிருக்கின்றோம். ஜனநாயக வழிமுறையில் தேர்தல் நடைபெறவேண்டும் என்பதே எமது விருப்பம்.

அதற்காக அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழ் மக்கள் அனைவரும் எமது சகோதரர்கள் என்று தெரிவித்து வருகின்றார். அது வெறும் வாய்ச்சொல்லில் மட்டும் இருக்கக்கூடாது. செயலில் காட்டப்பட வேண்டும். தமிழ் மக்கள் இன்னும் பல்வேறு அச்சங்களுக்கு மத்தியிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந் நிலையிலேயே இந்தத் தேர்தல் நடைபெறுகின்றது.

இந்த மாநகரசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றியீட்டினால் யாழ்.நகரை நவீன மயப்படுத்துவதற்கான திட்டம் ஒன்று உடனடியாக முன்வைக்கப்படும்.

அத்துடன் யாழ். பஸ் நிலையம், நவீன சந்தைப் பகுதிகளில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படும் - என்றார். (50-9)


## சாவகச்சேரி மகளிர் கல்லூரி சொந்த இடத்தில் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

சாவகச்சேரி மகளிர் கல்லூரி நாளை தொடக்கம் அதன் சொந்த இடத்தில் இயங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்லூரியில் நலன்புரி நிலையம் அமைக்கப்பட்டதால் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு சாவகச்சேரி றிபேக் கல்லூரியிலும் இடைநிலை உயர் நிலைப் பிரிவுகள் தனியார் கல்வி நிலையம் ஒன்றிலும் நடத்தப்பட்டு வந்தன. கல்லூரியில் இயங்கிய நலன்புரி நிலையம் அண்மையில் மூடப்பட்டதால் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் நாளை சொந்த இடத்தில் இயங்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (203-207)

## மாவைக் கந்தன் ஆலயத்தின் வருடாந்த காம்யோற்ச விழா சனிக்கிழமை ஆரம்பம்



யாழ்ப்பாணம், ஜூன் 23

வரலாற்றுப் பிரசித்திபெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் காம்யோற்சவத் திருவிழாக்கள் எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை க்ஷேத்ரபால ஆராதனையும், ஜூலை முதலாம் திகதி ஷண்முகப் பெருமான் திருநடன விழாவும், 8 ஆம் திகதி ஷண்முகார்ச்சனையும், 17 ஆம் திகதி திருக்கார்த்திகை விழாவும் சிறப்புற நடைபெறவுள்ளன. எதிர்வரும் 20 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் ஆடி அமாவாசையன்று கீரிமலை புனித ஸ்தலத்தில் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

ஆலயத் திருவிழா நாள்களில் தமிழகம், தஞ்சாவூர் பிரபல வித்துவான்களான பழனிச்சாமி நடராஜ், நாராயண சாமி நல்லகுமார் குழுவினரின் விசேட தவில் - நாதஸ்வரக் கச்சேரி நடைபெறும். திருவிழாக் காலம் முழுவதும் காலை 7 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி மாலை 4 மணிவரை நடைபெறவுள்ளன. திருவிழாக் காலங்களில் அடியவர்கள் முருகப் பெருமானை வழிபடுவதற்கு வசதியாக இலங்கை போக்குவரத்துச் சபை வழமைபோல் தெல்லிப்பழை சோதனைச் சாவடியிலிருந்து போக்குவரத்துச் சேவையினை நடத்தும்.

ஆலய திருவிழாக்களுக்கு வருகை தருவோர் தெல்லிப்பழை சோதனைச் சாவடியில் ஆலயத்திற்கு வருவதற்கான விசேட அனுமதியை இரண்டு நாள்களுக்கு முன்னரே பெறுவதற்கான வசதிகள் செய்யப்படும் என்றும் ஆதீன நிர்வாக வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-9)

## நெடுந்தீவுத் துறைமுகத்தில் கடல் நீர் வற்றியது நேற்று படகுச் சேவையில் கால தாமதம்!

நெடுந்தீவு, ஜூன் 23

நெடுந்தீவு துறைமுகத்தில் ஏற்பட்டுள்ள கடல் நீர் வற்றியதன் காரணமாக நேற்று திங்கட்கிழமை கோட்டமட்டப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கென வேலணைக்குச் செல்ல வேண்டிய 50 ற்கும் அதிகமான மாணவர்களும் நூற்றி ஐம்பதிற்கும் மேற்பட்ட பயணிகளும் தமது பயணத்தை தொடர முடியாமல் துறைமுகத்தில் நீண்ட நேரம் காத்து நின்றனர்.

கடல் வற்றின் காரணமாக குமுதினிப் படகு துறைமுக நுழைவாயிலில் உள்ள மற்றுமொரு பாலத்தில் நேற்று முன்தினம் இரவே நிறுத்தப்பட்டது. நேற்றைய தினம் இந்தப் பாலதின் வழியாக படகில் ஓரளவு பயணிகள் ஏற்றப்பட்ட போதும் படகு கல்லின் மேல் ஏறிக்கொண்டது. பொது மக்களின் சிரமங்களை அவதானித்த படையினர் விரைந்து நெடுந்தீவு ப. நோ.கூ. சங்கப் படகின் உதவியுடன் குமுதினியை ஒருவாறு இழுத்து வெளிக் கடலில் நங்கூர மிட்டனர். பின்னர் சங்கப்படகின் மூலம் பயணிகள் ஏற்றிச் செல்லப்பட்டு குமுதினியில் ஏற்றப் பட்ட போதும் நீண்ட நேரத்தின் பின்னரே சேவை ஆரம்பமானது.(203-111)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 10 | 24.06.2009 |
| | புதன்கிழமை |
| திதி: | துதியை |
| | மு.இ. 09.24 வரை |
| நட்சத்திரம்: | புனர்பூசம் |
| | மு.இ. 09.46 வரை |
| சுபநேரம்: | 04.25 - 05.55 |
| ராகுகாலம்: | 11.55 - 01.25 |

## திருமுழுக்கு யோவான் ஆலயப் பெருவிழா

யாழ்.ஆஸ்பத்திரி வீதி சுண்டிக்குளியில் அமைந்துள்ள புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழாத் திருப்பலி நாளை புதன்கிழமை காலை 6 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும்.

இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4.45 மணிக்கு திவ்விய நற்கருணைப் பெருவிழாவும் அதனைத் தொடர்ந்து நற்கருணை ஆசீர்வாதமும் இடம் பெறும். (50)

## அமுதசுரபியின் பொன்விழா

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையின் பொன் விழா (50 ஆண்டுகள் ) எதிர்வரும் 2 ஆம் திகதி வியாழக்கிழமை நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய மஞ்சத் திருவிழாவன்று மாலை 5 மணிக்கு நடைபெறும். பொன்விழாவை யொட்டி சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது. (203-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறிவிட்டது

தாவடி தெற்கு, கொக்குவிலைச் சேர்ந்த சிவலிங்கம் நளினி என்பவரது தே.அ.அ. (856582345V) மல்லாகச் சந்தியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.

தொடர்பு:- சிவலிங்கம் நளினி
உடுவில் கிழக்கு, கற்பகப்பிள்ளையார் கோவிலடி.
T.P. 0776146988

# நயினாதீவுக்குச் செல்லும் பக்தர்களின் அ.அட்டைகள் குறிகாட்டுவானில் பெறப்படும்

நல்லூர்,ஜூன் 23

நாளை ஆரம்பமாகும் நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய திருவிழாவுக்குச் செல்லும் அடியார்களின் அடையாள அட்டைகள் குறிகாட்டுவான் துறைமுகத்தில் படையினரால் பெறப்பட்டு இலகுவழிப் பயண அட்டைகள் வழங்கப்படும்.

நயினாதீவில் இருந்து திரும்புபவர்கள் குறிகாட்டுவானில் மீண்டும் தமது அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

யாத்திரிகர்களுக்கு எவ்விதசிரமங்களும் ஏற்படாத வகையில் தங்களது நடவடிக்கைகள் இருக்கும் என படையினர் உறுதியளித்துள்ளதாக நாகபூஷணி அம்பாள் ஆலய அறங்காவல் சபைத் தலைவர் ஆ.தியாகராசா தெரிவித்தார்.

ஆலயத்தினுள் அடியார்களின் பிரார்த்தனைகளின் போது திருட்டுச் சம்பவங்கள் ஏற்படாதவாறு ஒழுங்கு நிரை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அங்கு புனிதத் தன்மையைப் பேண வேண்டும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

யாழ். செயலகக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டபடி குடி தண்ணீர், உணவு, மலசல கூட சுகாதார நடைமுறைகள் உரிய முறையில் இடம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(203 - 111)

## ஒத்துமாறல்

வவுனியா தெற்கு வலய பாடசாலைக்கு ஆங்கில, கணித பாட பட்டதாரி ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்கள் யாழ்.கல்வி வலய பாடசாலைக்கு ஒத்துமாற விரும்புகின்றனர்.

தொடர்புகளுக்கு: 0244902445, 0779262422, 0776071143

## மரண அறிவித்தல்

### முத்து கந்தசாமி

மூளாயைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் தற்போது தோணிக்கல், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த முத்து கந்தசாமி (21.06.2009) ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் காலமானார். அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (24.06.2009) புதன்கிழமை தோணிக்கல், வவுனியா இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

தோணிக்கல்,
வவுனியா. (86477)

## மரண அறிவித்தல்கள்

### மகேந்திரன் சசீந்திரன்



31, கே.கே.எஸ்.வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகக் கொண்ட மகேந்திரன் சசீந்திரன் நேற்று (22.06.2009) திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் மகேந்திரன் (சாருஜன் பென்சி உரிமையாளர்) -புவனேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும் கஜேந்திரன் (கஜன்), விஜேந்திரன் (விஜன்), நிலாந்தி (நிலா), சாருஜன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் மகிழ்பரா, சுபாஜினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கா.மகேந்திரன் (தந்தை)

31, கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

### திருமதி செல்லம்மா கதிரிப்பிள்ளை

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் சூராவத்தையை (ஏழாலை தெற்கு) வதிவிடமாகவும் தற்போது கனடாவில் வசித்துவந்தவருமாகிய திருமதி செல்லம்மா கதிரிப்பிள்ளை (13.06.2009) சனிக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து கதிரிப்பிள்ளையின் (இளைப்பாறிய புகையிரத தலைமைப் பாதுகாப்பு உத்தியோகத்தர்) அன்பு மனைவியும் ஏகபுதல்வி தவமணிதேவியின் (ரஜனி) அன்புத் தாயும் கஜமுகலிங்கம் (இளைப்பாறிய பொதுமுகாமையாளர் சீ-நோர் நிறுவனம், யாழ்.பிராந்தியம்) அவர்களின் அன்பு மாமியும் பிரதிகாஷ் (பிரதிகாஷ் - சசிமாலா), ஜனனி, (ஆதித்தன் - ஜனனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மாதேஷ்சின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (16.06.2009) செவ்வாய்க் கிழமை கனடாவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவலிங்கம், கஜமுகலிங்கம்

T.P No: 416 298 4154
கனடா.

## கண்ணீர் அஞ்சலிகள்



அமரர் வேலாயுதபிள்ளை தவமணி
(வட.இலங்கை சர்வோதய கிளிநொச்சி இணைப்பாளரும், இயக்குநர் சபையின் செயலாளரும் இராமநாதபுரம், கிளிநொச்சி)



அமரர் தம்பிப்பிள்ளை செல்வராஜா
(வட.இலங்கை சர்வோதய இயக்குநர் சபை உறுப்பினர் பட்டினசபை வீதி, மானிப்பாய்)

வட.இலங்கை சர்வோதயத்தின் ஆரம்பகால அங்கத்தவர்களாகவும் இயக்குனர் சபை உறுப்பினர்களாகவும் இருந்து கிராமங்களில் மக்களுக்கு சேவையாற்றியதோடு நிறுவனத்தின் வளர்ச்சிக்கு மிகப்பெரும் பங்காற்றிய இவ்விரு மரியாதை மனிதர்களின் இழப்பை எண்ணி மனம் வருந்துகின்றோம். அவர்களது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னார்களது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல சிவயோக சுவாமிகள் பாதம் நினைந்து பிரார்த்திக்கின்றோம்.

வட இலங்கை சர்வோதயம், புங்குடுதீவு-3.

வட இலங்கை சர்வோதய குடும்பத்தினர்


ஏ-9 தரைப்பாதையூடான யாழ். ⟷ கொழும்பு போக்குவரத்துச் சேவை

ஈஸ்வரன் ரான்ஸ்போட் சேர்வீஸ்

ESWARRAN TRANSPORT SERVICE




யாழ்.குடாநாட்டுக்கான தரைவழிப் போக்குவரத்துச் சேவையை
(யாழ்ப்பாணம் → கொழும்பு, கொழும்பு → யாழ்ப்பாணம்)
நாங்கள் ஆரம்பித்திருக்கின்றோம் என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

யாழ்.குடாநாட்டிலிருந்து உள்ளூர் உற்பத்தி விவசாயப் பொருள்களைக் குறைந்த கட்டணத்துடன் கொழும்புக்குக் கொண்டு செல்வதற்கு வசதி செய்துள்ளோம்.

☆ 11ஆம் திகதி முதல் ஏ-9 வீதியூடான எமது போக்குவரத்துச் சேவை ஆரம்பமாகியுள்ளது.

- ஒரு தசாப்த காலத்துக்கு மேல் வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்ற நிறுவனம்.
- இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் முற்றிலும் காப்புறுதி செய்யப்பட்ட போக்குவரத்துச் சேவை.
- 24 மணி நேரமும் எமது கொழும்பு அலுவலகத்தில் பொருள்களை ஒப்படைக்கக் கூடிய வசதி.
- சிநேகபூர்வமானதும் பாதுகாப்பானதுமான சேவை....
- துரித கதியில் பொருள்களைப் பெற்றுக்கொள்ளும் வசதி.
- பெப்சிக்கோலா, லுமாலா, ஹீரோ சைக்கிள்கள், CALTEX ஓயில் வகைகள், DSI ரயர், ரியூப் வகைகள் ஆகியவற்றைக் கொழும்பு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

PEPSI
THE LUMALA CYCLE ALL STEEL
CALTEX
HERO CYCLES

ஈஸ்வரன் ரான்ஸ்போட் சேர்வீஸ்
201,B, டாம் வீதி, கொழும்பு - 12.
T.P.: 0112433889, 0112435247, 0777674119

ஈஸ்வரன் ரான்ஸ்போட் சேர்வீஸ்
69, 115, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 2813, 021 222 4317



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினை நாகபூஷணி அம்மன் ஆலயம் சக்திபீடங்களில் புவனேஸ்வரி பீடம்

**நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய இவ்வாண்டுக்கான பெருந்திருவிழா இன்று (23.06.2009) செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் வரலாற்றுச் சிறப்புக்கள் உட்பட உற்சவச் சிறப்புக்கள் குறித்த தகவல்களை உள்ளடக்கியது இக்கட்டுரை.**

சக்தி வழிபாடு உலகின் பல பாகங்களிலும் இந்துக்கள் வாழும் மத்தியில் பரந்த ஒரு வழிபாட்டு முறையாக விளங்கி வருகின்றது. அத்தகைய சக்தி வழிபாட்டுக்குரிய தலங்களில் ஈழத்தில் உள்ள நயினாதீவும் ஒன்றாகும். சமுத்திரத்தின் மத்தியிலே தளிர்போல் விளங்கும் மணித்தீவிலே அறுபத்துநான்கு சக்தி பீடங்களில் ஒன்றான புவனேஸ்வரி பீடம் அமைந்திருப்பதாக மகாகவி காளிதாசன் கூறியுள்ளார். சக்தியின் அருட்பொலிவுள்ள இடங்களே சக்திபீடங்களாகும். இவ்வுலகிலே இத்தகைய சக்திபீடங்கள் அறுபத்துநான்கு என ஒரு சாராரும் இன்னும் சிலர் ஐம்பத்தொன்று என்றும் அவற்றில் பதினெட்டு மிகமிக விசேடமானது என்றும் தெரிவித்துள்ளனர். மதுரையிலே மீனாட்சியாவும், காஞ்சியிலே காமாட்சியாகவும், காசியிலே விசாலாட்சியாகவும், நாகபட்டினத்திலே நீலாயதாட்சியாகவும் உறையும் மாபெரும் சத்தியே நயினையிலே நாகாம்பிகையாகவும் உறைகின்றாள்.

சக்தி வழிபாட்டின் சிறப்பையும் அவசியத்தையும் மட்டுமன்றி சக்தியை வழிபடும் முறையையும் போதிக்கும் சாக்த சமய சம்பிரதாயப்படி, உலகில் உள்ள சக்தி பீடங்களில் காஞ்சி காமாட்சி ஆலயத்தை காமகோடிபீடம் எனவும் மதுரை மீனாட்சி ஆலயத்தை சியாமளபீடம் எனவும் அழைப்பதுபோல நயினை நாகபூஷணி ஆலயத்தை புவனேஸ்வரிபீடம் எனவும் அழைக்கப்படும். நயினை நாகபூஷணி ஆலயத்தை புவனேஸ்வரிபீடம் எனப் போற்றப்படும் பெருமை ஈழத்துக்குரியதேயாகும். நயினாதீவுக்கு அண்மையில் உள்ள அனலைதீவில் இப்பொழுது விளங்கும் நாகதம்பிரான் திருமூர்த்தி, ஒல்லாந்தர் இக்கோயிலை அழிப்பதற்கு முன் இங்கு இருந்ததாகவும் நம்பப்படுவதால் இது நாகேஸ்வரம் எனவும் அழைக்கப்பட்ட தென்பர். புராதன வழிபாட்டு இடமாக அமைந்த இக்கோயிலின் ஆரம்ப நிலைபற்றி நாம் இப்போது அறியத்தக்க சான்றுகள் கிடைக்கவில்லை. தான் தோன்றியாக மண்ணினின்றும் தோன்றியருளிய அம்பிகையின் திருப்படிமத்தை இந்தியாவிலிருந்து வந்த நயினாப்பட்டர் என்ற அந்தணர் பூசித்தார் என்றும், சிலப்பதிகார காலத்துச் செட்டிமார் வியாபார நிமித்தம் இங்கு பலர் வந்துபோயினர். அக்காலத்தில் நயினாதீவுக்கு அண்மையில் உள்ள புளியந்தீவில் இருந்து நாகமொன்று அம்பாளை அர்ச்சிக்கத் தினந்தோறும் வந்து போவது வழக்கம். ஒருநாள் வழக்கம்போல் பூவுடன் கடல் வழியாக வந்த நாகத்தைத் தாக்க முயன்ற கருடனை அவ்வழியே வந்த செட்டியார் விலக்கி கப்பலில் இருந்த திரவியத்தைக் கரைசேர்த்து கோயிலைச் செப்பனிட்டு நயினார்பட்டர் என்னும்



பிராமணரைப் பூசைக்கு நியமித்தார். அவர் பெயர் நிலைத்து வந்து இத்தீவுக்கு நயினாதீவு என்று அழைக்கப்படுகின்றது. இதனை நிரூபிக்கும் வகையில் இன்றும் கடலில் பாம்பு சுற்றிக் கல்லும் கருடன் கல்லும் கோயிலின் வடக்குப் புறமாக உள்ள கடலில் நீருக்கு மேலால் பார்க்கக்கூடியதாக உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

நாகத்தால் பூசிக்கப்பட்ட அம்மையே நாகபூஷணி என்னும் பெயர் பெற்றாள். ஒல்லாந்தர் காலத்தில் இக்கோயில் இடிக்கப்பட்டு சூறையாடப்பட்டது. அத்தருணத்தில் அம்பாளின் திருவுருவம் கோயிலின் வடமேற்கே நின்ற பெரிய ஆலமரப் பொந்தில் மறைக்கப்பட்டது. ஏறக்குறைய 45 வருடங்களுக்கு முன் இம் மரம் பட்டு அழிந்துவிட்டது. இக்கோயில் இடிக்கப்பட்டபோது ஏழு திருவீதிகளும் செப்புத்தேர், பவளத்தேர் இருந்தனவெனவும் இன்று அம்பாளினாலேயே கடலில் தள்ளி விடப்பட்டன என்றும் கர்ணபரம்பரைக்கதைகள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. இதன்பின்னர் இக்கோயில் வழிபடுநரின் உதவியுடன் புதிதாக அமைக்கப்பட்டு, காலத்துக்கு காலம் பெருப்பிக்கப்பட்டு, நிர்வகிக்கப்பட்டு வந்தது. இயற்கை எழில் மிகுந்த இடங்களே இறைவன் விரும்பி உறையும் இடமாகும். இந்த வகையில் நாகாம்பிகையின் ஆலயம் நீலத்திரைக் கரையோரத்திலே எழிலுடன் அமைந்துள்ளது. இங்கு வேப்ப மரங்கள் எழிலுடன் வளர்ந்து அம்பாளின் இருப்பிடத்தினை இயம்புகின்றன. தேவியின் திருக்கண் நோக்கு திரைகடலில் பரப்புகின்றது. அது திக்கெல்லாம் வளைந்து இச்சிறு தீவுக்கே அருள் அரண் அமைக்கின்றது. அதனால் இந்த அருட்சக்தியை வேறு மகுட சக்திகளால் அழிக்கமுடியவில்லை.

ஒருமுறை அந்நியர்களால் அழிக்கப்பட்டும் முற்றாக அழிந்துவிடாமல் தலைதூக்கி நிற்கின்றது. கண்கவர் ஓவியங்கள், கவின் தரு

**எஸ்.பி.காசிநாதன்,**
ஆசிரியர்,
யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி.

சிலைகள் காண்பதற்கரிய கேளிக்கைகள் அரும்பெரும் பொருள்கள் என்பவை மக்கள் கூட்டத்தை வரவழைக்கும் சாதனங்கள் அவையேதும் அங்கில்லை. அனுதினமும், ஆண்டுதோறும் வருபவர் தொகை அளவிடமுடியாது. சக்தியின் அருள் ஈர்ப்பொன்றே அனைவரையும் ஈர்க்கின்றது. இன்றும்கூட நான்கு பக்கமும் அடைக்கப்பட்ட நிலையிலும் அடியவர்கள் வருகைக்கும் குறைச்சல் நேர்ந்துவிடவில்லை. இன்னும் ஏழுதீவு ஜனங்களும் பெரும் தொகையாகக் கூடுகின்றார்கள். இவ்வாலயக் கருவறையில் கல்லினாலான ஐந்து தலைநாக உருவமும் அதன்கீழ் இலிங்கமும் உள்ளது. ஆராய்ச்சியாளர்களின் நோக்கின்படி இந்நாகம் மிகமிகத் தொன்மையானது என்றும் கூறப்படுகிறது. இதனை ஆராய்ந்த ஆராய்ச்சி யாளர் எம். நரசிம்மன் இதன் தொன்மையை வியந்து கூறியுள்ளார். பண்டைய இலங்கைத் திராவிடமக்கள் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வழிபட்டு வந்ததெனக் கருதப்படும் சிவ வழிபாட்டுக்கும் அனுகூலமாக விளங்குகின்ற நாக வழிபாடு மிகவும் தொன்மையானது.

நாகதம்பிரானாக, நாகபூஷணியாக வேறு பல இடங்களிலும் இவ்வழிபாடு நடைபெறுகின்றது. "சர்ப்பம் சக்தியின் சின்னம்" என்பர். சக்தி நாகவடிவில் அன்பர்களுக்கு அருள் புரிந்ததாகக் கர்ண பரம்பரைக் கதைகள் பல உள்ளன.

இவ்வாறாக பல்வேறு சிறப்புகளும் ஒருங்கே அமையப் பெற்று மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் என அத்தனையும் அமையப்பெற்ற ஓர் அற்புதத் திருத்தலமாக விளங்குகின்றது இத்தலம். இன்று இக்கோயிலில் இரு வாயில்களிலும் இராஜகோபுரங்களும் புதிய தேர்களும் கல்யாண மண்டபம், அன்னதான மண்டபங்கள், மிகப்பெரிய நந்தி, புதிய இராஜகோபுர முகப்புக்கள் போன்ற பல்வேறு திருப்பணி வேலைகளுடன் புதுப்பொலிவுடன் விளங்குவதுடன் பல அடியார்கள் சென்று தரிசிக்கமுடியாத இக்கால கட்டத்திலும் தடையேதுமின்றி மகோற்சவ உற்சவங்கள் சிறப்பாக நடைபெற்று வருகின்ற தலமாக இது விளங்கி வருகின்றது.

இவ்வருடத்துக்கான மகோற்சவங்கள் 23.06.2009இல் அதாவது இன்று ஆரம்பமாகி 02.07.2009இல் மஞ்சத்திரு விழாவும், 03.07.2009 இல் பூந்தண்டிகைத்திரு விழாவும், 05.07.2009 இல் சப்பறத்திருவிழாவும், 07.07.2009இல் தேர்த்திருவிழாவும், 08.07.2009 இல் தீர்த்தத்திருவிழாவும், 09.07.2009இல் தெற்ப உற்சவமும் நடைபெற திருவருள்பாலித்துள்ளது. இவ்வேளையில் நாகபூஷணி அம்பாளின் அருட்கடாட்சத்தினை நேரில் சென்று தரிசிக்கும் பேறு சிவசீலர்களாகிய எல்லோருக்கும் கிடைக்காவிடினும் இத்தினங்களில் சக்தியின் அருள் நோக்குக்கு இலக்காகி அம்பிகை அடியார்களாகிய எல்லோருக்கும் ஒரு விடிவு காலத்திற்குரிய வழியினைக் காட்டியருளுமாறு பிரார்த்திப்போமாக.

## இடரின்றி வாழ வைப்பாய்!

சங்கொடு வேதகானம்
தவிலொடு முரசும் கொட்ட
எங்கணும் பக்தர் கூடி
இயம்பிட அன்னை நாமம்
பொங்கிடும் கடலின் ஓசை
பொலிவுற்று அலையாய் மோத
தங்கமா நிறத்து நாகம்
தலைவிரித்து நடனமாட
சிங்க வாகனத்தில் அன்னை
சிறப்புற அமர்ந்து வர
மங்கலப் பொழுதில் சேயோன்
மாமணிக் கதிர்கள் ஓச்ச
கங்கை வார் சடையான் அன்னல்
களிப்புற்று உவகை பூக்க
ஓங்கிய கொடிக் கம்பத்தில்
ஒப்பரும் கொடிய தேற
இங்கிந்த காட்சி கண்டோர்
இடரின்றி வாழ்வர் கண்டீர்!

விகடகவி.

## சமய சந்நிதிகளில்

வடமராட்சி,ஜூன்23

பொலிகண்டி, கந்தவனம் கல்யாண வேலவர் கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினைந்து நாள்கள் நடைபெறவுள்ளன.

தேர்த்திருவிழா எதிர்வரும் 6ஆம் திகதி திங்கட்கிழமையும், மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (201 - 236)

* * *

கரவெட்டி,ஜூன்23

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை விநாயகர் ஆலய அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9.32 மணி தொடக்கம் முற்பகல் 11.32 மணிவரை நடைபெறவுள்ளது.

துன்னாலை இந்திரன் அம்மன் ஆலய பிரதமகுரு சக்தி உபாசகதிரர், கிரியாதிலகம் சிவஸ்ரீ சி.இந்திரராஜக்குருக்கள் பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்திவைக்கவுள்ளனர். (201-236-70)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன்23

தொல்புரம் துரையன்வளவு பிள்ளையார் ஆலய அஷ்டோத்திரசத (108) சங்காபிஷேகமும் மணவாளக்கோலத் திருவிழாவும் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும்.

அன்றையதினம் மாலை 4 மணிக்கு விஷேட தீபாராதனைகள் பூசை நிகழ்வுகள் ஆகியன இடம்பெற்று திருவூஞ்சல் இடம்பெறும். (201)

* * *

வடமராட்சி,ஜூன்23

பருத்தித்துறை புனித தோமையர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து ஒன்பது தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 2ஆம் திகதி வியாழக்கிழமை நற்கருணை ஆராதனையும் திருப்பலியும் இடம்பெறும். மறுநாள் வெள்ளிக்கிழமை காலை கூட்டுத் திருப்பலி திருச்சொரூப பவனியுடன் திருவிழா நிறைவுபெறவுள்ளது. (201- 236)

* * *

வண்ணை,ஜூன்23

யாழ்.வண்ணை வடமேற்கு, காரைக்காட்டு ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த சனிக்கிழமை பி.ப. 4 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறுகின்றன.

எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்குப் பொங்கல் விழாவுடன் திருவிழா நிறைவுபெறும். அ(204 - 16)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன்23

கந்தரோடை வற்றாக்கைப்பதி விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாத சுவாமி ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினொரு தினங்கள் நடைபெறுகின்றது.

தேர்த்திருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (201)

## கூட்டுறவுச் சங்கக் கிளைகளில்

# ஆளணி அங்கீகாரம் உரிய வகையில் ஏற்படுத்தவேண்டியது அவசியம்

யாழ்ப்பாணம்,ஜூன்23

குடாநாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் உரிய வகையில் ஆளணி அங்கீகாரம், பதவி நிர்ணயம் போன்றன ஏற்படுத்தப்படவேண்டும் என்று மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் ஆளணி தொடர்பான செயலமர்வு இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்ட தகவலைக் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

குடாநாட்டில் உள்ள பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்களில் ஆளணி அங்கீகாரம் உரிய வகையில் மேற்கொள்ளப்படவில்லை.

இதனால் பணியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பணியாளரின் நலன்கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் - என்றார். (203-224)



பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இன்பர்சிட்டி கூட்டுறவு நகர் விற்பனை நிலையத் திறப்பு விழாவில் பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், பருத்தித்துறை மக்கள் வங்கிக் கிளைமுகாமையாளர் மு.சிவநேசன் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதையும் சங்கத் தலைவர் த.சந்திரதாஸ் இயக்குநர் சபை உறுப்பினர் எஸ்.சந்தியாப்பிள்ளை ஆகியோர் நிற்பதையும் படங்களில் காணலாம்.
(படங்கள்: கர்ணன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## திருமதி மகேந்திரன் தவமணிதேவி

(நூலகர், பொதுநூலகம், யாழ்.மாநகரசபை).

பாசத்தின் இருப்பிடமாம் பண்பின் உறைவிடமாம்
இன்சொல்லும் ஏற்றமுறுஞ் செயலும்
உதவும் இளகிய நெஞ்சும் கொண்டு
நேசத்துடன் எம்மை வளர்த்து வரும்வேளையிலே
ஏன்தான் எம்மை விட்டுப் பிரிந்தாயோ!
அநாதையான எமக்கு யார்தான் இனித் துணையோ....

இன்று (23.06.2009) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில்
எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின்
ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து
இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு
உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

மண்ணில் 18 - 11 - 1955 விண்ணில் 24 - 05 - 2009

16/25, சிவன்கோயில் வீதி,
திருநெல்வேலி.

பிரிவால் துயருறும்
கணவர்.
பிள்ளைகள்.

---

மண்மகிழ: 04.11.1956

# மீளாத் துயரில் 2 ஆம் ஆண்டு

கண் நெகிழ: 16.06.2007



## திருமதி கணேஸ்வரி தம்பிராஜா (சுகந்தா)

(முன்னாள் அலுவலக உத்தியோகத்தர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)

திதி:- 23.06.2009 வளர்பிறை பிரதமை

எம் குடும்பத்தின் குலவிளக்கே சுகந்தா.....
எம் இதயமதில் விடிவு தந்த விடிவெள்ளியே
உன் கணவன் நடைபிணமானேன்
உனை ஈன்றவள் அந்தோ பரிதவித்தாள்
உடன் பிறந்தோர் சிறகிழந்த அன்றிலானோம்
ஏனிந்த வேதனை....! யார் செய்த சோதனை....!
ஏதும் நாம் அறியோம் ஆண்டுகள் இரண்டு சென்றாலும்
இன்றும் உனைத் தேடுகிறோம்...
காத்திருக்கிறோம் கண்களில் கண்ணீருடன்
வாசலில் உன் வரவுக்காய்....

'துர்க்கா இல்லம்',
26/5, பிரம்படி லேன்,
கொக்குவில்.

உனது அன்பு உள்ளங்களான
கணவர், தாய், சகோதரர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
நற்சிந்தனை
"கல்விக்காக எதையும் தியாகம் செய் எதற்காகவும் கல்வியைத் தியாகம் செய்யாதே!"

க.பொ.த.உயர்தர
கல்விச்சுடர்
18
Special Guidance For A/L 2009&2010

க. பொ.த உயர்தர மாணவர்களுக்கென தனியாக வெளிவரும்
கல்வி இணைப்பிதழ்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஓகஸ்ட்
General Certificate of Education (Advance Level) Model Examination - 2009 August

## அரசியல் மூல தத்துவங்கள் -II

நேரம் - 1 மணித்தியாலம்

*** இவ்வார இணைப்பிதழில்...
* அரசியல் மூல தத்துவங்கள் வினாத்தாளின் தொடர்ச்சி ( கொ.வ.நி)...
* கணக்கீடு - 02 இன் பகுதி - 11 ( கொ.வ.நி)...
* பௌதிகவியலின் அமைப்புக்கட்டுரை வினாத்தாளின் தொடர்ச்சி (கொ.தமிழ்ச்சங்கம்)
* வணிகக்கல்வி வினாத்தாள் 02 இன் பகுதி 11 ( கொ.வ.நி).....

22.06.2009 இன் தொடர்ச்சி ... பகுதி - 1

பகுதி - 1 40 வினாக்களைக்கொண்டது. எல்லா வினாக்களுக்கும் விடை தருக. ஒவ்வொரு வினாவிற்கும் தரப்பட்டுள்ள விடைகளுள் சரியானதைத் தெரிவுசெய்க.

* ஒன்று முதல் 10 வரையுள்ள வினாக்களில் இடம்பெறும் ஒரு கூற்று வினாவின் தலைப்புக்குப் பொருத்தமற்றதாகும். பொருத்தமற்ற கூற்றைத் தெரிவு செய்க.

1. இலங்கையில் பிரித்தானிய குடியேற்ற நாட்டாட்சியின் கீழ்
   1) பாராளுமன்ற ஆட்சிமுறை வளர்வதற்கு வழிவகுத்தது.
   2) இரட்டைப் பொருளாதாரம் தோன்ற வழிவகுத்தது.
   3) கிராமிய விவசாயத்திற்கு புத்துயிர் அளிக்கப்பட்டது.
   4) சுதந்திரமான ஊழிய சந்தை உருவாக்கப்பட்டது.

2. 19ஆம் நூற்றாண்டில் பெருந்தோட்டப் பொருளாதாரம் ஆரம்பிக்கப்பட்டது
   1) இலங்கையில் முதலாளித்துவப் பொருளாதாரம் உருவாக வழிவகுத்தது.
   2) மத்திய வகுப்பார் தோற்றம் பெற்றனர்.
   3) மலையக மக்களிடையே நிலப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டது.
   4) போக்குவரத்து, தொடர்பாடல், வங்கி வளர்ச்சியடைந்தது.

3. கோல்புறுக் கமரன் சீர்திருத்தத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க நிறுவனங்களாவன.
   1) தேசாதிபதிக்கு மதிரை வழங்கும் மந்திரி மார்சபை
   2) சட்ட நிருபண சபை.
   3) உயர் நீதிமன்றம்.
   4) சட்ட நிருவாக சபை.

4. 1833இல் நடைமுறைக்கு வந்த கோல்புறுக் கமரன் சீர்திருத்தத்தின் கீழ்
   1) இராஜகாரிய முறை ஒழிக்கப்படவில்லை.
   2) 16 மாகாணங்கள் 5 மாகாணங்களாக்கப்பட்டன.
   3) வர்த்தகத்தில் அரசுக்கிருந்த ஏகபோக உரிமை நீக்கம்.
   4) சிவில் சேவையாளரும் பயிர்ச்செய்கையில் ஈடுபட அனுமதித்தமை..

   I

5. 1833 இல் தாபிக்கப்பட்ட சட்டநிருபண சபை
   1) 15 உறுப்பினர்களைக் கொண்டது.
   2) உத்தியோக சார்புடையோர் 9 பேர் உத்தியோக சார்பற்றோர் 6 பேர் .
   3) தேசாதிபதியால் தலைமை தாங்கப்பட்டது.
   4) முழுவரவு செலவுத்திட்டத்தையும் கட்டுப்படுத்தும் அங்கீகாரத்தைப் பெற்றிருந்தது.

6. 1910 குறு மக்கலம் அரசியல் சீர்திருத்தம்
   1) சட்டசபை உறுப்பினர் 21 பேர்.
   2) படித்த இலங்கையர் பிரதிநிதியாக சேர்பொன் இராமநாதன் தெரிவுசெய்யப்பட்டார்.
   3) இலங்கை மக்கள் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது.
   4) 1912 இல் நடைமுறைக்கு வந்தது.

7. 1924 மனிங் டிவன் சயர் அரசியல் யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட சட்டநிருபணசபை
   1) அங்கத்தவர் எண்ணிக்கை 49.
   2) உத்தியோக சார்புடையவர்களைவிட உத்தியோக சார்பற்றோர் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது.
   3) உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவரில் 23 பேர் பிரதேசவாரியாக தெரிவு செய்யப்பட்டன
   4) தேசாதிபதி சபைக்கு தலைமை தாங்கினார்

8. தேசியம் இயக்கம்
   1) ஒரு மகாசன இயக்கமாக இருந்தது.
   2) இலங்கை மத்திய தரவர்க்கத்தால் ஆரம்பிக்கப்பட்டது.
   3) 1921இன் பின் இனரீதியான பிரிவினையால் பலவீனமடைந்தது.
   4) சேர் பொன் அருணாசலம் இதன் முதலாவது தலைவர்.

9) இலங்கையின் இடதுசாரிக்கட்சிகள்
   1) மேற்கத்தைய கல்வியைப்பெற்ற மாக்சிச சிந்தனைகளால் கவரப்பட்ட ஒரு இளைஞர் குழுவால் ஆரம்பிக்கப்பட்டது.
   2) இதன் ஆரம்பமாக சூரியமல்ல இயக்கம் கருதப்பட்டது.
   3) இடதுசாரிகள் இடையே காணப்பட்ட ஒற்றுமையே அதன் பலம்.
   4) இலங்கையில் தாபிக்கப்பட்ட முதலாவது ஒழுங்கமைந்த அரசியற்கட்சியாக இலங்கை சமசமாஜக் கட்சி விளங்கியது.

10. 1931இல் வழங்கப்பட்ட சர்வசன வாக்குரிமை
   1) அரசியல் கட்சிமுறை இலங்கையில் தோன்ற அடித்தளத்தை இட்டது.
   2) சாதாரண மக்கள் மத்தியில் அரசியல் உணர்வை ஏற்படுத்தியது.
   3) மத்திய வகுப்பை சேர்ந்தோர் சர்வசனவாக்குரிமைக்கு சார்பான கருத்தைக் கொண்டிருந்தனர்.
   4) வாக்குரிமையின் வயதெல்லை 21 ஆகும்.

★ 11 முதல் 20 வரையுள்ள ஒவ்வொரு வினாவும் நான்கு கூற்றுக்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் மூன்று சரியானதாகும். சரியான கூற்றுக்களின் தொகுதியை தெரிவுசெய்க.

11. நிர்வாகக் குழுமுறையை டொனமூர் குழுவினர் சிபார்சு செய்யக் காரணம்
   A) இலங்கையின் அரசியல்வாதிகளின் நிர்வாகத்தேர்ச்சியின்மை.
   B) அரசியல் கட்சிகள் வளர்ச்சியடையாமை.
   C) மக்கள் பிரதிநிதிகளும் நிர்வாகத்தில் பங்குபற்ற சந்தர்ப்பம் வழங்குவதற்கு.
   D) சிறுபான்மை இனத்தவரின் வேண்டுகோள்.
   1) BCD 2) ACD 3) ABC 4) ABD

12. டொனமூர் அரசாங்கத்தின் கீழ் இருந்த தேசாதிபதி
   A) யாப்பின் பிரதான காவலராக இருந்தார்
   B) சட்டத்துறைப் பணியில் இருந்து அகற்றப்படவில்லை
   C) அரசாங்க சபையின் தலைவரும் இவர் பிரித்தானிய முடியால் நியமிக்கப்பட்டார்
   D) அவசரகால நிலைகளின் போது சட்ட ஆக்கத்தினை தேசாதிபதி முழுமையாக பொறுப்பேற்க முடியாது
   1) ABC 2) BCD 3) ACD 4) ABD

13. டொனமூர் யாப்பின் கீழ் அரசாங்க காரியதரிசிகள்
   A) பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் காவல் நாய்கள் என வர்ணிக்கப்பட்டனர்
   B) சட்டக்காரியதரிசி நிதிக்காரியதரிசி பிரதமகாரியதரிசி என்போரே மூவருமாவர்
   C) சட்டக்காரியதரிசி தேசாதிபதிக்கு அடுத்த அதிகாரத்தில் இருந்ததுடன் பதில் தேசாதிபதியாக கடமையாற்றும் அதிகாரம் பெற்று இருத்தார்
   D) பகிரங்கசேவை பாதுகாப்பு வெளிநாட்டு அலுவல்கள் போன்றவற்றுக்கு பிரதமகாரியதரிசி பொறுப்பாவார்
   1) BCD 2) ACD 3) ABD 4) ABC

14. டொனமூர் யாப்பின் கீழ் அரசுக் கழகம் (அரசாங்க சபை)
   A) வரவுசெலவுத் திட்டத்தை நிராகரிக்கும் அதிகாரம் கொண்டது
   B) சட்ட ஆக்கத்திற்கு பொறுப்பாகக் காணப்பட்டது
   C) மூன்று அரச உத்தியோகத்தர்களும் சபைக் கூட்டங்களில் கலந்து கொள்ளவும் வாக்களிக்கும் உரிமையும் காணப்பட்டது
   D) சபைக் கூட்டங்களுக்கு சபாநாயகர் தலைமைதாங்குவார்
   1) ABC 2) BCD 3) ACD 4) ABD

15. 1931 டொனமூர் ஆணைக்குழு
   A) இனவாரிப்பிரதிநிதித்துவத்தை நீக்க வேண்டுமென சிபார்சு செய்தது.
   B) தேசாதிபதி அரசியல் முரண்பாடுகளிலிருந்து விடுபட்டிருப்பதை எதிர்பார்த்தது.
   C) இலங்கையருக்கு முழுப்பொறுப்பாட்சி அரசாங்கத்தை வழங்கியது.
   D) சர்வசனவாக்குரிமை வழங்கக்கூடாது என்ற உயர்வகுப்பினரின் கோரிக்கையை நிராகரித்தது.
   1) BCD 2) ABD 3) CDA 4) ABC

16. டொனமூர் நிர்வாகக் குழுமுறை
   A) இலங்கை அரசியல்வாதிகளுக்கு அரசியல்பயிற்சிக்களமாக விளங்கியது.
   B) அரசியல் கட்சிமுறை இன்மையால் சிபார்சு செய்யப்பட்டது.
   C) இலங்கையின் பிற்கால மந்திரிசபைகளின் கூட்டுப்பொறுப்பு ஏற்படுவதற்கான அடிப்படையை வழங்கியது.
   D) அரசாங்க சபையின் எல்லா உறுப்பினர்களும் நிறைவேற்றுத் தொழிற்பாடுகளில் பங்குபற்றினர்.
   1) BAC 2) BCD 3) ABD 4) ACD

17. 1948 சோல்பரி அரசியல் யாப்பு
   A) இலங்கைக்கு பூரண இறைமையினை வழங்கியுது.
   B) இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்தை வழங்கியது.
   C) மந்திரிசபை முறையினை அறிமுகம் செய்தது.
   D) ஈரவையுடைய பாராளுமன்றத்தை அறிமுகம் செய்தது.
   1) ABD 2) ABC 3) BCD 4) ACD

18. சோல்பரி யாப்பின் கீழிருந்த பாராளுமன்றம்
   A) ஈரவையுடைய பாராளுமன்றம்.
   B) கீழ் சபையின் உறுப்பினர்கள் 101 பேர்.
   C) சபாநாயகர் சபைக்கூட்டங்களுக்கு தலைமைதாங்குவார்.
   D) இறைமை மிக்கதாக விளங்கியது.
   1) ABC 2) ABD 3) BCD 4) ACD

19. சோல்பரி யாப்பின் சிறுபான்மையினருக்கான காப்பீடுகளாவன
   A) பல அங்கத்தவர் தேர்தல்தொகுதி.
   B) 29 ஆம் சரத்து.
   C) கீழ் சபைக்கான 5 நியமன அங்கத்தவர்.
   D) செனற்சபை.
   1) CAD 2) BCD 3) ABD 4 ACD

20. சோல்பரி யாப்பின் செனட்சபை
   A) 30 உறுப்பினர்களைக் கொண்டது.
   B) மந்திரி சபையில் அங்கம் வகிப்பதற்கு இதன் அங்கத்தவருக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.
   C) 15 பேர் பிரதமரின் சிபார்சின்படி மகாதேசாதிபதியால் நியமனம் செய்யப்பட்டது.
   D) நீதியமைச்சர் செனட்டில் இருந்து நியமனம் செய்ய வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.
   1) BCD 2) ACD 3) ABC 4) ABD

★ 21 முதல் 25 வரையுள்ள வினாக்களில் இடம்பெறும் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

21. முதலாம் குடியரசு யாப்பு
   1) ஓரங்கப் பாராளுமன்றத்தை அறிமுகம் செய்தது.
   2) செனட் சபை தொடர்ந்தும் காணப்பட்டது.
   3) மந்திரிசபை நிர்வாகமுறை நீக்கப்பட்டது.
   4) பிரித்தானிய மகாராணி அரசின் தலைவியாக விளங்கினார்.

22. 1972 யாப்பின் கீழிருந்த ஜனாதிபதி
   1) மசோதாக்களுக்கு சம்மதம் தெரிவிக்கும் அதிகாரத்தைப் பெற்றிருத்தார்.
   2) பிரதம மந்திரியால் நியமனம் செய்யப்பட்டார்.
   3) பதவிக்காலம் 6 வருடம்.
   4) அமைச்சர்களை சுயவிருப்பின்பேரில் நியமனம் செய்யும் அதிகாரம் பெற்றிருந்தார்.

23. 1972 யாப்பின் கீழ் உருவாக்கப்பட்ட சட்டத்துறை
   1) அரச அதிகாரத்தை பிரயோகிக்கும் மீயுயர் மன்றமாக விளங்கியது.
   2) நீதிப்புனராய்வு அதிகாரத்தை கொண்டிருத்தது.
   3) இரு மன்ற முறையினைக் கொண்டிருந்தது.
   4) ஜனாதிபதியால் தலைமைதாங்கப்பட்டது.

24. 1972 யாப்பின் கீழ் மசோதாக்களுக்கு சம்மதம் தெரிவிக்கும் அதிகாரம்
   1) ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருந்தது.
   2) பிரதமமந்திரிக்கு வழங்கப்பட்டிருந்தது.
   3) சபைமுதல்வருக்கு வழங்கப்பட்டிருந்தது.
   4) சபாநாயகருக்கு வழங்கப்பட்டிருந்தது.

25. 1978 யாப்பின் கீழ் ஜனாதிபதி
   1) மந்திரி சபையின் தலைவர்.
   2) ஐந்தாண்டு பதவிக்காலம்.
   3) மக்களால் மறைமுகமாகத் தெரிவு செய்யப்பட்டார்.
   4) சபாநாயகரை நியமிக்கும் அதிகாரம் பெற்றிருந்தார்.

நன்றி: கொழும்பு வணிகவள நிலையம்

தொடர்ச்சி பக்கம் IV...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஓகஸ்ட்
General Certificate of Education (Advance Level) Model Examination - 2009 August

# கணக்கீடு 02

நேரம்:2மணித்தியாலம்

## பகுதி-11

* முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.

01. வரையறுத்த அலிபாபா கம்பனியின் 31 மார்ச் 2008இல் எடுக்கப்பட்ட பரீட்சை மீதி வருமாறு:

| | 000 ரூபா | 000 ரூபா |
|---|---|---|
| கூறப்பட்ட சாதாரண.பங்கு மூலதனம் (25,000 பங்குகள்) | | 5,000 |
| 20% தொகுதிக்கடன் | | 1,500 |
| ஆதனங்கள் கிரயம் | 4,000 | |
| மோட்டார் வாகனங்கள் கிரயம் | 3,200 | |
| பொறி கிரயம் | 2,300 | |
| தளபாடம் கிரயம் | 1,200 | |
| இருப்பு 31 மார்ச் 2008 இல் | 130 | 6,000 |
| விற்பனை | | |
| விற்பனைக்கிரயம் | | |
| செலுத்திய வரி | 3,600 | |
| வரி ஏற்பாடு 2006/2007 | 350 | 60 |
| நிர்வாகச் செலவுகள் | | |
| பங்கீட்டுக்கிரயம் | 10 | |
| பணிப்பாளர் சம்பளம் | 75 | |
| செலுத்திய பங்கு இலாபம் | 48 | |
| பெறு.தேள் ஏற்பாடு 01 ஏப்ரல் 2007இல் | 140 | |
| மோட்டார் வாகனங்கள் | | 1,200 |
| பொறி | | 900 |
| தளபாடம் | | 400 |
| பெற்ற கழிவு | | 30 |
| பொது ஒதுக்கம் | | 240 |
| இலாபநட்ட கணக்கு மீதி | | 160 |
| மீள் மதிப்பீட்டு மிகை | | 400 |
| கடன்கொடுத்தோர் கடன்பட்டோர் | 200 | 150 |
| ஐயக்கடன் ஏற்பாடு | | 60 |
| காப்புறுதி | 75 | |
| விளம்பரம் | 22 | |
| உயர்தொழில் முறைச்செலவுகள் | 32 | |
| பங்கு வழங்கல் செலவு | 20 | |
| வங்கி | 698 | |
| | 16,100 | 16,100 |

**மேலதிகத் தகவல்கள் வருமாறு:-**

1) இறுதி இருப்பினுள் 80,000 ரூபா இருப்புக்கள் பழுதடைந்தவையாக இருந்தன. இவை பதிவளிக்கப்பட வேண்டும். எனினும், இவை 10,000 ரூபாவிற்கு விற்க முடியும் என எதிர்பார்க்கப்பட்டது.
2) 31 மார்ச் 2008இல் அட்டுறுவைகளும் முற்பணங்களும் வருமாறு:-

| | முற்பணம் | அட்டுறு |
|---|---|---|
| கணக்காய்வு கட்டணம் | | 45,000 |
| காப்புறுதி | 15,000 | |
| பங்கீட்டுக்கிரயம் | 10,000 | 8,000 |

3) தளபாடம் என்பதினுள் 400,000 ரூபாவானவை 30 செப்டெம்பர் 2007ஆல் வாங்கியவையாகும். தளபாடம் கிரயத்தில் 10% பெறுமானத் தேய்விடுக.
4) ஆதனங்கள் 500,000 ரூபாவாக மறுமதிப்பீடு செய்யப்பட்டது.
5) 30 செப்டெம்பர் 2005ஆல் 400,000 ரூபாவுக்கு வாங்கிய மோட்டார் வாகனம் பகுதி மாற்றாக கொடுக்கப்பட்டு 01 ஒக்டோபர் 2007 இல் புதிய மோட்டார் வாகனம் 800,000 ரூபாவுக்கு வாங்கப்பட்டது. எஞ்சிய தொகையாக செலுத்திய காசு 500,000 ரூபா மோட்டார் வாகன கணக்கில் வரவு வைத்தது தவிர வேறு பதிவுகள் இடம்பெறவில்லை. மோட்டார் வாகனம் பொறி கிரயத்தில் 20% பெறுமானத்தேய்விடுக.
6) கடன்பட்டோரில் 20,000 ரூபாவை அறவிட முடியாக்கடனாக பதிவளிப்பதுடன் ஐயக் கடன் ஏற்பாட்டை 30,000 ரூபாவாக சீராக்குக.
7) செலுத்திய வரியினுள் 2006/2007 ஆம் ஆண்டுக்குரிய வரி 50,000 ரூபாவும் உள்ளடங்கும். 2007/2008 ஆம் ஆண்டுக்கு வருமான வரி 410,000 ரூபாவாக மதிப்பிடப்பட்டது.
8) இயக்குநர் சபைத் தீர்மானங்கள் வருமாறு:-
   1. பொது ஒதுக்கத்திற்கு 40,000 ரூபாவை மாற்றுதல்.
   2. சாதாரணப் பங்குகளுக்கு ஒரு 10% பங்கு இலாபம் வெளிப்படுத்தல்.

**வேண்டப்படுவது:-**

1) 31 மார்ச் 2008இல் முடிந்த ஆண்டுக்கு வருமானக்கூற்று. (பொருத்தமான குறிப்புக்களுடன்)
2) உரிமை மாற்றக்கூற்று. 3) சொத்து அசைவுக்கூற்று.
4) பின்வரும் கணக்கீட்டு விகிதங்களை கணிக்குக.
   1. மொத்த இலாப வீதம். 2. வட்டிக்காப்பு விகிதம்,
   3. பங்கொன்றுக்கான உழைப்பு. 4. இணைப்பு விகிதம்.

02. வரையறுத்த லங்கா கம்பனி 20 ரூபா விலையில் 80,000 சாதாரண பங்குகளை பின்வருமாறு பணத்தைப் பெறுவதென்று அடிப்படையில் வழங்கியது.
விண்ணப்பம் 12 ரூபா, அழைப்பு 8 ரூபா.
இக்கம்பனி மாதிரி அமைப்பு விதியைப் பின்பற்றும் கம்பனியாகும்.
01 மே 2008 இல் பின்வருமாறு விண்ணப்பங்கள் பெறப்பட்டன.
வெளிநாட்டு விண்ணப்பம் 20,000, பிற நிறுவனங்கள் 10,000, பொதுமக்கள் 90,000.
15 மே 2008இல் பின்வருமாறு பங்குகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன.
வெளிநாட்டு விண்ணப்பம் முற்றாக நிராகரிக்கப்பட்டது.
பிற நிறுவனங்கள் 10,000 பங்குகள், பொதுமக்கள் 70,000 பங்குகள்
01 ஒக்டோபர் 2008இல் அழைப்புப்பணத்தை 15 ஒக்டோபருக்குள் செலுத்துமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.
15 ஒக்டோபர் 2008 இற்குள் 2,000 பங்குகளுக்கு ஒதுக்கப்பட்ட பிற நிறுவனப் பங்குகளும் 3,600 பங்குகளுக்கு விண்ணப்பித்த பொதுமக்களும் தவிர அழைப்புப்பணம் பெறப்பட்டது.
அழைப்பு நிலுவைக்கான வட்டி 10% ஆகும்.
01 நவம்பர் 2008 இல் நிலுவைப் பங்குகள் யாவும் 25 ரூபா விலையில் மீள் விநியோகம் செய்யப்பட்டன.
மீளவழங்கல் செலவு 15,000 ரூபா ஏற்பட்டது.
10 நவம்பர் 2008இல் முன்னைய பங்குதாரர் செலுத்திய தொகை மீளச் செலுத்தப்பட்டது.

**வேண்டப்படுவது:-**

1) பங்கு வழங்கல் மீள் விநியோகம் தொடர்பான குறிப்பேட்டுப் பதிவுகள்.
2) பங்கு மீள் விநியோகக் கணக்கு .

03. வரையறுத்த அல்லி கம்பனியின் தகவல்கள் வருமாறு:-

| | 31.03.07<br>000 ரூபா | 31.03.08<br>000 ரூபா |
|---|---|---|
| கூறப்பட்ட சா.ப மூலதனம் | 1,500 | 2,000 |
| இலாபநட்டக் கணக்கு | 350 | 1,125 |
| தொகுதிக்கடன்கள் | 870 | 620 |
| பொது ஒதுக்கம் | 320 | 400 |
| கடன்கொடுத்தோர் | 140 | 175 |
| அட்டுறு தொகுதி கடன்வட்டி | 35 | 25 |
| அட்டுறு வருமான வரி | 26 | 38 |
| அட்டுறு செயற்பாட்டு செலவு | - | 50 |
| | 3,241 | 4,433 |

| | 31.03.07<br>000 ரூபா | 31.03.08<br>000 ரூபா |
|---|---|---|
| காணிக்கட்டடம் (தேறியது) | 1,200 | 1,080 |
| மோட்டார் வாகனம் (தேறியது) | 750 | 800 |
| தளபாடம் | 420 | 300 |
| முதலீடுகள் | 170 | 100 |
| சரக்கிருப்பு | 80 | 60 |
| கடன்பட்டோர் | 140 | 180 |
| வங்கி | 481 | 1,913 |
| | 3,241 | 4,433 |

வருமானக் கூற்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட தகவல்கள் வருமாறு:-

| | 000 ரூபா |
|---|---|
| விற்பனைகள் | 4,800 |
| மொத்த இலாபம் | 2,000 |
| ஏனைய வருமானம் (முதலீட்டு வருமானம்) | 150 |
| செயற்பாட்டு செலவுகள் | 900 |
| தொகுதிக்கடன் வட்டி | 175 |
| ஆண்டுக்குரிய வருமான வரி | 220 |

பிற தகவல்கள் வருமாறு:-
செயற்பாட்டு செலவுகளுள் பின்வருவனவும் உள்ளடங்கும்.

| | |
|---|---|
| காணிக்கட்டடத் தேய்வு | 120,000 ரூபா |
| மோட்டார் வாகனத் தேய்வு | 50,000 ரூபா |
| தளபாட தேய்வு | 70,000 ரூபா |
| தளபாட விற்பனை நட்டம் | 20,000 ரூபா |

நன்றி: கொழும்பு வணிகவள நிலையம்

**வேண்டப்படுவது:-**

1) நேர் முறையில் செயற்பாட்டு நடவடிக்கையைக் காட்டத்தக்கவாறான காசுப்பாய்ச்சல் கூற்று.
2) நேரில் முறையில் செயற்பாட்டு நடவடிக்கைக்கான காசுப்பாய்ச்சலைக் காட்டுக.

04. அ. விளையாட்டு பொம்மை உற்பத்தி செய்யும் நிறுவனம் ஒன்றின் ஊழியர் தொடர்பான விவரம் வருமாறு:-

| | ஊழியர் பெயர் | | |
|---|---|---|---|
| | சிவா | பாலா | குமரன் |
| 10 பொம்மை செய்வ. அனுமதித்த நேரம் | 30 நிமி. | 40 நிமி. | 50 நிமி. |
| ஊழியர் வேலை செய்த நேரம் | 30 மணி | 60 மணி | 60 மணி |
| மணிக்கான கூலி | 50 ரூபா | 60 ரூபா | 70 ரூபா |
| உற்பத்தி செய்த பொம்மையின் எண்ணிக்கை | 800 | 900 | 600 |

ஊழியர்கள் சமநேரக் கூலிக்கு மேலதிகமாக பின்வரும் கொடுப்பனவுக்கு உரித்துடையவர்கள்.
1) கல்சி முறையில் மிகையூதியக் கொடுப்பனவு.
2) 500 பொம்மைகளுக்கு மேல் உற்பத்தி செய்யும் ஊழியருக்கு ஒரு பொம்மைக்கு 5 ரூபா ஊக்குவிப்பு கொடுப்பனவு.

**வேண்டப்படுவது:-**
ஒவ்வொரு ஊழியர்களுக்குமான மொத்தக் கொடுப்பனவுகளைக் கணிப்பிடுக.

ஆ. உற்பத்தி செய்யும் நிறுவனம் ஒன்றின் மூலப்பொருள் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு:-

| | |
|---|---|
| 02 ஜனவரி 2008 கொள்வனவு. | 300 அலகுகள் 22 ரூபா வீதம் |
| 05 ஜனவரி 2008 கொள்வனவு | 400 அலகுகள் 28 ரூபா வீதம் |
| 10 ஜனவரி 2008இல் வழங்கல் | 250 அலகுகள் |
| 15 ஜனவரி 2008 கொள்வனவு | 500 அலகுகள் 31 ரூபா வீதம் |
| 20 ஜனவரி 2008 வழங்கல் | 600 அலகுகள் |

எளிய சராசரி முறையில் களஞ்சிய பேரேட்டில் பதிக.

இ. நிறுவனம் ஒன்றின் பொருள் தொடர்பான பேரேட்டில் விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| வருடாந்தம் தேவையான பொருள் | 16,000 அலகுகள் |
| ஒரு கட்டளை அனுப்புவதற்கான செலவு | 100 ரூபா |
| ஓர் அலகு பொருளின் கொள்வனவுக் கிரயம் | 25 ரூபா |

இருப்பு வைத்திருப்பதற்கான செலவு கொள்வனவுக் கிரயத்தின் 20% ஆகும்.

**வேண்டப்படுவது:-**

1) சிக்கன கட்டளைத் தொகை யாது?
2) வருடாந்த கட்டளைகளின் எண்ணிக்கை.

05. வரையறுத்த ஜெகதா கம்பனி 2 உற்பத்தி திணைக்களங்களையும் 2 சேவைத்திணைக்களங்களையும் கொண்டதாகும்.

| | உற்பத்தி 1 | உற்பத்தி 2 | களஞ்சியம் | பராமரிப்பு |
|---|---|---|---|---|
| நேரில் கூலிகள் | 175,000 | 130,000 | 80,000 | 38,000 |
| நேரில் பொருள் | 53,000 | 21,000 | 12,000 | 11,000 |

| ஏனைய மேந்தலைகள் | ரூபா | | |
|---|---|---|---|
| தொழிற்சாலை வாடகை | 180,000 | | |
| தொழிற்சாலை மின்சாரம் | 120,000 | இயந்திர எரிபொருள் | 90,000 |
| ஊழியர் நலன்புரிச் செலவுகள் | 60,000 | ஊழியர் காப்புறுதி | 80,000 |
| இயந்திர தேய்வு | 350,000 | தொழிற்சாலை திருத்தம் | 100,000 |

**மேலதிகத் தகவல்கள் வருமாறு:-**

| நிலையம் | பரப்பளவு சது.மீற்றர் | இயந்திர பெறுமதி | இயந்திர மணித்தியாலம் | ஊழியர் எண் | பொருள் வழங்கல் | பராமரிப்பு நேரம் மணி |
|---|---|---|---|---|---|---|
| உற்பத்தி 1 | 9,000 | 200,000 | 100,000 | 20 | 240,000 | 6,000 |
| உற்பத்தி 2 | 6,000 | 150,000 | 50,000 | 10 | 180,000 | 4,000 |
| களஞ்சியம் | 3,000 | ........... | ........... | 8 | ........... | ........... |
| பராமரிப்பு | 2,000 | ........... | ........... | 2 | 180,000 | ........... |

**வேண்டப்படுவது:-**

1) மேந்தலைக்கிரயங்களை உற்பத்தி நிலையங்களுக்கும் சேவை நிலையங்களுக்கும் பங்கீடு செய்க.
2) சேவை நிலையத்தின் மேந்தலைகளை பொருத்தமான அடிப்படையில் உற்பத்தி நிலையங்களுக்கு மறு பங்கீடு செய்க.
3) இயந்திர மணி அடிப்படையில் ஒவ்வொரு நிலையங்களுக்குமான மேந்தலை உறிஞ்சல் விகிதங்களை கணிப்பிடுக.
4) விளையாட்டுக்கார் ஒன்றின் மூலக்கிரயம் 250 ரூபாவாகும். இது உற்பத்தி 1 இல் 3 மணித்தியாலமும், உற்பத்தி 2 இல் 2 மணித்தியாலமும் உற்பத்திக்கு செலவிடப்பட்டதெனின் ஒரு விளையாட்டுக்காரின் உற்பத்திக்கிரயம் யாது?

06. அ. நிறுவனம் ஒன்றின் உற்பத்தி தொடர்பான விவரங்கள் வருமாறு:-

| | | | |
|---|---|---|---|
| விற்பனை 20,000 அலகு | 600,000 | | |
| உற்பத்தி செலவுகள் | | | |
| பொருட் செலவு | 175,000 | நேர் செலவு | 30,000 |
| நேர்கூலி | 75,000 | நிலையான உற்பத்தி மேந்தலை | 80,000 |
| | | மாறும் உற்பத்தி மேந்தலை | 120,000 |

**வேண்டப்படுவது:-**

1) சமப்பாட்டுப்புள்ளி அலகுகளில். 2) பாதுகாப்பு எல்லை
3) 40,000 ரூபா இலாபம் பெறுவதற்கு எவ்வளவு அலகு விற்கவேண்டும்?
4) 25,000 அலகுகளுக்கு மேல் வெளியீடு செய்ய முடியாத நிலையில் 50,000 ரூபா இலாபம் பெறுவதற்கு ஓர் அலகு விற்கவேண்டிய விலை யாது?

ஆ. பாலா என்பவர் தனது வியாபாரத்திற்கு புதிய இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்ய தீர்மானித்துள்ளார்.
A இயந்திரத்தின் அடிப்படைக்கிரயம் 60,000 ரூபா
B இயந்திரத்தின் அடிப்படைக்கிரயம் 80,000 ரூபா
அடுத்து வரும் நான்கு வருடங்களில் இரு இயந்திரங்களினதும் தேறிய காசுப்பாய்ச்சல் வருமாறு:-

| | இயந்திரம் A | இயந்திரம் B |
|---|---|---|
| வருடம் 1 | + 30,000 | + 20,000 |
| வருடம் 2 | + 30,000 | + 30,000 |
| வருடம் 3 | + 20,000 | + 10,000 |
| வருடம் 4 | + 20,000 | + 15,000 |

முதலீட்டின் கழிவிடும் காரணி 10%

| வருடம் | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| | 0.909 | 0.826 | 0.751 | 0.683 |

வேண்டப்படுவது
இயந்திரம் ஒவ்வொன்றுக்குமான தேறிய நிகழ்கால பெறுமதிகளைக் கணிப்பிடுக.

நிறைவுபெற்றன...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஓகஸ்ட்
General Certificate of Education (Advance Level) Model Examination - 2009 August

மாகாணக் கல்வித்திணைக்களமும் கொழும்பு தமிழ்ச்சங்கமும் இணைந்து வழங்கும் மாதிரி வினாத்தாள்

# பௌதிகவியல் - 01

## பகுதி - 'ஆ'


## அமைப்புக்கட்டுரை வினாக்கள்

* எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01. ஓய்விலிருந்து நேரான பாதையில் செல்லும் Truck ஒன்றில் தொங்கவிடப்பட்டுள்ள எளிய ஊசலானது முதல் 6 Secகளுக்கு இழையானது Truck செல்லும் திசைக்கு எதிர்த்திசையில் நிலைக்குத்துடன் $tan^{-1}$ (1/4) என்ற சாய்வில் சாய்ந்திருந்தது. பின் Truck செல்லும்போது ஊசலானது நிலைக்குத்தாகவிருந்தது. இக்கணத்தில் கீழே படத்தில் காட்டியவாறு P என்ற புள்ளியில் இருந்து $34ms^{-1}$ என்ற வேகத்துடன் $tan^{-1}$ (8/15) என்ற கோணத்தில் ஒரு கல் எறியப்படுகின்றது. (6 Secஇன் பின் Truck மாறாவேகத்தில் செல்கிறது எனக்கொள்க.)


a) 1) ஆர்முடுகலைச் காண்க.
   2) ஆர்முடுகலில் சென்ற தூரம் யாது?
   3) 6 Sec இன்பின் அதன் வேகம் யாது?

b)




1) Truck இன் உயரம் நிலமட்டத்திலிருந்து 2m எனின், இக்கல்லானது Truckஇன் பின் புறம் AB ஐ தாக்குமா or இல்லையா என காரணங்களுடன் விளக்குக.
2) கல்லானது Truck இன் பின்புறத்தை அடிக்காவிடில் அக்கல்லானது அக்கணத்தில் Truck இலிருந்து எவ்வுயரத்திலிருக்கும் எனக்காண்க.
3) Truck இன் நீளம் 3m எனின், மேல்பகுதியை அதன் ஓரம் (AB) இலிருந்து எவ்வளவு தூரத்தில் தாக்கும் எனக்காண்க. (6 = 2.4)
4) கல்லானது Truckஇன் மேல் விழுந்து இணைந்துகொள்கிறது. கல்லின் திணிவு 5kg ஆகும். Truckஇன் திணிவு 20kg ஆகும். Truck இன் முன்னால் 3m தூரத்தில் குழந்தை ஒன்றை driver காண்கிறான். (அவன் தடுப்புகளை பிரயோகித்தவுடன் Truck நிற்கிறது எனக் கொள்க) மனிதன் சிந்திக்கும் சராசரி நேரம் 1/18sec எனின், இந்நேர இடைவெளியில் Truck ஆனது குழந்தையுடன் மோதுமா, இல்லையா என காரணங்களுடன் விளக்குக.

02.





வானியல் தொலைக்காட்டி ஒன்று தொலைவிலுள்ள பொருள் ஒன்றைப் பார்ப்பதற்கு இயல்பான செப்பஞ் செய்கையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. தொலைவிலிருந்து வரும் சமாந்தர ஒளிக்கதிர்கள் பொருளியில் படுவதைப் படம் காட்டுகின்றது.


a) மேலுள்ள படத்தை தாளில் வரைந்து இறுதி விம்பம் உண்டாதலைக்காட்டும் கதிர்ப்படம் வரைக.
b) தொலைக்காட்டியில் உருப்பெருக்க வலுவை வரையறுக்க வலுவை பொருளின் பார்வைதுண்டின் குவியத்தூரங்கள் Fo, Fc சார்பாக காண்க.
   1. இங்கு பயன்படுத்தப்படும் வில்லைகளின் குவியத்தூரங்கள் முறையே 50cm, 5cm ஆயின், தொலைக்காட்டியின் நீளம் யாது?
   2. தொலைக்காட்டியின் உருப்பெருக்க வலு என்ன?
c) தொலைக்காட்டி சந்திரனை நோக்க பயன்படுத்தப்படுகின்ற கண்ணின் அண்மைப் புள்ளியில் இறுதி விம்பம் உண்டாகுமாறு அதன் பார்வைத்துண்டு செப்பம் செய்யப்படுகிறது. சந்திரன் வெறும் கண்ணினால் கோணம் 0.5° கோணத்தை எதிரமைக்கின்றது. முதற் கோட்பாடுகளைப் பயன்படுத்திச் சந்திரனின் விம்பம் கண்ணில் எதிரமைக்கும் கோணத்தை கணிக்குக. கண்ணின் அண்மைப்புள்ளி 25cm தூரத்தில் இருக்கிறது எனவும், கண்ணுக்கும் பார்வைத்துண்டுக்குமிடையே உள்ள தூரம் புறக்கணிக்கத்தக்கது எனவும் கருத்திற் கொள்க.
d) தொலைக்காட்டி இயல்பான செப்பஞ்செய்கையின்போதா அல்லது தெளிவுப் பார்வையின் இழிவுத் தூரத்திற்குச் செப்பம் செய்யும்போதா அதன் உருப்பெருக்க வலு பெரியது?

03. a) மேற்பரப்பிழுவிசை என்றால் என்ன?
b) மயிர்த்துளைக்குழாய் ஒன்றை திரவத்திற்குள் அமிழ்த்தும்போது திரவ எழுச்சிக்கான கோவையை வழக்கமான குறியீடுகளுடன் பெறுக.
c) தொடுகை கோணம் என்றால் என்ன?
d) வெவ்வேறு உயரங்களில் மயிர்த்துளைக்குழாய் திரவத்திற்குள் அமிழ்த்தப்படும்போது தொடுகை கோணத்தின் அடிப்படையில் திரவ பிறையுருவின் வடிவங்களை விளக்குக.
e) 0.5mm ஆரையுடைய மயிர்த்துளைக்குழாய் தொடுக்கோணம் பூச்சியம் ஆகவும், அடர்த்தி $800kgm^{-3}$யும் மேற்பரப்பிழுவிசை $7.5\times10^{-3}Nm^{-1}$உம் உடைய திரவத்தில் அமிழ்த்தப்பட்டது எனின், திரவ எழுச்சி யாது?
f) ஒரு சிறு துவாரமுடைய பொற்கோளம் 40cm ஆழத்திற்கு நீர் புகாதவாறு அமிழ்த்தப்படுகிறது. நீரின் மேற்பரப்பு இழுவிசை $7.5\times10^{-4}NM^{-1}$ எனின், துவாரத்தின் ஆரையைக் காண்க.

04. புள்ளி மின்னேற்றம் Qவின் சம அழுத்த மேற்பரப்புக்கள் வரிப்படத்தில் காட்டப்படுள்ளன.




a) புள்ளி A இயிலிருந்து புள்ளி Bஇற்கு 2uc ஏற்றத்தை கொண்டுவர புலத்துக்கு எதிராக செய்த வேலையை காண்க.
b) இப்புலத்தில் 4500v சம அழுத்த மேற்பரப்பின் ஆரை 10m எனத் தரப்பட்டால் புள்ளி மின்னேற்றம் Qவின் பருமனைத் துணிக.
c) 6500v சம அழுத்த மேற்பரப்பிற்கும் 4500v சம அழுத்த மேற்பரப்பிற்குரிய இடைப்பட்ட வேறாக்கம் அண்ணளவாக 1.26m எனத் தரப்பட்டுள்ளது. எனின், இப்பிரதேசத்தில் சராசரி மின்புலச் செறிவைக்காண்க.
d)





மேலே படத்தில் காட்டப்பட்ட கோடு ABஇற்கு செங்குத்தாகச் செல்லும் மையம் O இனூடாக வரையப்பட்ட கோட்டின் மீது O விலிருந்து x தூரத்திலுள்ள புள்ளி P இல் இவ் ஏற்றம் காரணமாக மின்புல வலிமை $2Qx/ (x^2 + a^3)^{3/2}$ எனக்காட்டுக.
e) P என்ற புள்ளியில் இலத்திரன் ஏற்றம் ஒன்று வைக்கப்பட்டால் அதில் தாக்கும் விசை யாது? (இலத்திரனின் ஏற்றம் c எனக்கொள்க.)
f) $(x^2+a^2)^{3/2}$ $a^3$ எனின், இவ் இலத்திரன் ஆனது PO இனூடாக எளிமை இசை இயக்கத்தை ஆற்றும் எனக்காட்டுக.
g) இவ் இலத்திரன் அதன் மையத்தினூடாக எளிமை இசை இயக்கத்தை ஆற்றின் கோணவேகம் $2Qc/ 4\pi\varepsilon o a^{33} m$ எனக்காட்டுக. m என்பது இலத்திரனின் திணிவு ஆகும்.

**5(a) அல்லது 5(b) வினா ஒன்றுக்கு விடையளிக்குக.**


**Essay (Electricity)**

05. a) 1. மின்னியலில் கேச்சோவின் விதிகள் (Kirchhoff's Laws) இரண்டையும் முற்றாய் கூறுக.
2. அவ்விதிகளிரண்டில் முதல்விதி ஏற்றக்காப்புத் தத்துவத்திற்கும் இரண்டாம் விதி சக்திக்காப்புத் தத்துவத்திற்கும் அமைவானவை என குறிப்பிடப்படுகின்றன. இதனை விவரிக்குக.




A) என்பது 4v மின்னியக்கவிசையும் 2Ω உட்தடையும் உடையது.
B) என்பது 2v மின்னியக்க விசையும் 1Ω உட்தடையும் உடையது.
1. சுற்றினூடு மின்னோட்டம் பாயும் திசையை ஒரு பருமட்டான மின் சுற்றுப்படத்திற் காட்டுவதுடன் மின்னோட்டத்தையும் காண்க.
2. கலங்களின் முடிவிட அழுத்த வேறுபாடென்ன?
3. 3Ω தடையிலும் 1.5Ω தடையிலும் விரயமான வலு என்ன?
4. தடைகளில் மொத்தமாய் விரயமான வலு என்ன?
5. கலங்களாற் சுற்றில் செய்யப்பட்ட வலு என்ன?
6. மேலே 4, 5 இல் பெறுமானங்கள் வேறுபடலின் காரணத்தை சுருக்கமாய் விவரிக்குக.

b)




நன்றி: மாகாணக் கல்வித்திணைக்களம், கொழும்பு தமிழ்ச்சங்கம்

புகையிரதம் புகையிரத நிலையத்திற்கு வருவதற்கான சமிக்ஞையை வழங்குவதற்கான முறையினை பின்வரும் நிலைகளுக்கேற்ப தயாரிக்குக.


நிலை - 1 A என்னும் Plat from இல் புகையிரதம் நிற்கும்போது பிறிதொரு புகையிரதம் வருமாயின் வரும் புகையிரதம் B என்னும் Platformஇற்கு செல்வதற்கான சமிக்ஞையை மாத்திரம் SB என்னும் பச்சை ஒளி ஒளிர்வதன் மூலம் வழங்கப்படும்.

நிலை - 11 A, B என்னும் இரண்டு Platform இலும் புகையிரதம் நிற்கும் சந்தர்ப்பத்தில் புகையிரத நிலையத்திற்கு புகையிரதம் அனுமதிக்கப்பட மாட்டாது. இதற்கான சமிக்ஞையை S ஆனது அணைந்திருப்பதன் மூலம் கொடுக்கப்படல் வேண்டும்.

5) மேற்குறித்த தேவைகளை திருப்தியாக்கும் பயப்புகள் S, SB என்பவற்றுக்கேற்ப உண்மை அட்டவணையை தயாரிக்குக.
6) இதிலிருந்து பயப்புகள் SB, S என்பவற்றுக்கேற்ப தர்க்க கோவைகளைப் பெறுக.
7) தர்க்க சுற்றை படலைகளைப் பயன்படுத்தி வரைக.

**6(a) அல்லது 6(b) வினா ஒன்றுக்கு விடையளிக்குக.**

06. a) 1. வெப்ப இயக்கலியலின் முதலாம் விதியை சமன்பாடு ரீதியாக எழுதுக.
2. வாயு ஒன்றின் நிலை சம்பந்தமாக
   a) சேறலீல்லா செயன்முறை
   b) சம வெப்ப செயன்முறை ஆகியவற்றால் யாது கருதப்படுகின்றது.
3. இலட்சிய வாயு ஒன்றைக் கருதுமிடத்து மேலே பகுதி 11 a இலும், பகுதி 11 b இலும் குறிப்பிட்ட மாற்றங்கள் ஒவ்வொரு வகைக்கும் பகுதி 1 இல் நீங்கள் எழுதிய கோவையை எவ்வாறு மாற்றி அமைப்பீர்?
4. ஒரு குறித்த திணிவுள்ள வாயு ஒன்றின் P-V வரிப்படம் அருகில் தரப்பட்டுள்ளது. A, B என்ற புள்ளியின் அமுக்கம், கனவளவு வெப்பநிலை என்பன முறையே
$A = (1x10^5Pa, 5x10^{-4}m^3, 300k)$
$B = (15x10^5Pa, 0.7x10^{-4}m^3, 650k)$ புள்ளிகள் C, D இன் வெப்பநிலைகள் முறையே 1500k, 680k ஆகும். வாயு Aஇல் $5\times10^{-4}m^3$ கனவளவுடன் ஆரம்பித்து நிலை Bஇற்கு நெருக்கப்படுகின்றது.





பின்வருவனவற்றை வரைபை பயன்படுத்தி காண்க.
a) வாயுவின் மூல் எண்ணிக்கையை காண்க.
b) மாறாக் கனவளவில் மூலர் வாயு வெப்பக் கொள்ளளவு $21JK^{-1}$ எனின், B, C மாற்றத்துக்கு வழங்கப்பட்ட வெப்பசக்தியைக் காண்க.
c) B, C மாற்றித்தின்போது வாயுவால் செய்யப்பட்ட வேலை யாது?
d) இம் மாற்றத்தின்போது வாயுவின் அகச்சக்தி மாற்றம் யாது?
e) நிலை Dஇல் அமுக்கத்தைக் காண்க. $R = 8.3J mol^{-1}K^{-1}$

b) 1. நுழைவாய் மீடிறன் என்றால் என்ன?
2. சோடியம் உலோகத்தின் நுழைவாய் அலை நீளம் 0.45um இக்கூற்றை விளக்குக.
3. 0.2μm அலை நீளமுள்ள ஒளிக்கற்றை ஒன்று சோடியம் உலோகத்தின் மீது விழுகின்றது.
   1) ஒளியின் போட்டன் சக்தி யாது?
   2) சோடியம் உலோகத்தின் வேலைச்சார்பு யாது?
   3) விடுவிக்கப்படும் ஒளி இலத்திரன்களின் இயக்கச்சக்தி யாது?
   4) ஒளியின் ''செறிவு மாறாமல் மீடிறன் மாறுமாயின்'' நிறுத்தும் அழுத்தம் தொடர்பாக வரைபின் உதவியுடன் விளக்குக.
4. இருமை இயல்பு என்பதால் விளங்குவது யாது?
5. 1000v அழுத்த வேறுபாட்டினால் ஆர்முடுகப்படும் இலத்திரனின்,
   1) இயக்கசக்தி
   2) உந்தம்.
   3) டீபுறோகலியின் அலைநீளம் ஆகியவற்றைக் காண்க.
   $Me = 9.1 x 10^{-31}kg$ $e = 1.6 x 10^{-19}C$
   $h = 6.63 x 10^{-34}Js$ $c = 3x10^8 ms^{-1}$


-நிறைவுபெற்றது-

## தவறிற்கு வருந்துகின்றோம்!
## கடந்தவார வினாக்களின் திருத்தம்...

01. மாணவர்கள் கண்ணாடி அரைக்கோளத்தின் ஆரையை துணிவதற்கு பாடசாலையில் உள்ள ஆய்வுகூட உபகரணமான கோளமானியை பயன்படுத்தினார்கள். உருவில் காட்டப்பட்டுள்ள
a) கோளமானியில் A,P, Q, S என்பவற்றை பெயரிடுக.
A ..............................
P ..............................
Q ..............................
S ..............................




02. குற்றலைத் தாங்கி ஒன்றைப் பயன்படுத்தி நீர்ப்பரப்பு அலைகளின் இயல்புகளை கற்கமுடியும்.
a) உருவில் காணப்படும் குற்றலைத்தாங்கியின் ஒழுங்கின் மீது இலக்கமிடப்பட்ட பகுதிகளுக்குப் பெயரிடுக.
1. ..............................
2. ..............................
3. ..............................
4. ..............................
5. ..............................
6. ..............................




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஓகஸ்ட்
General Certificate of Education (Advance Level) Model Examination - 2009 August

**வணிகக்கல்வி -02** நேரம்:2மணித்தியாலம்

22.06.2009 இன் தொடர்ச்சி ...

## பகுதி 1

* முதலாம், 2ஆம் வினாக்கள் உட்பட நான்கு வினாக்களுக்கு விடை தருக.

01. அ. முயற்சியாண்மை தொடர்பான சூழல் ஒத்துழைப்புக்களையும், தடைகளையும் தனித் தனியாக விளக்குக.
ஆ. முயற்சியாளர் என்பவர் தீர்மானம் எடுக்கக்கூடிய தன்மையினையும் அவற்றைத் திடசங் கற்பத்துடன் அடையக்கூடிய தன்மையினையும் உடையவராக இருத்தல்வேண்டும். விளக்குக.
இ. ஒரு வணிக முயற்சியானது ஏன் சிறிய நடுத்தர முயற்சியாக அடையாளப்படுத்தப்படல் வேண்டும்?
ஈ. தற்போதைய முகாமையாளர் பல சவால்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது. அத்தகைய சவால்களைக் குறிப்பிடுக.
உ. திட்டமிடற் தொழிற்பாடுகளைக் குறிப்பிடுக.
ஊ. உற்பத்தி மட்டத்திற்கும், சிக்கன மட்டத்திற்கும் இடையிலான தொடர்பை விளக்குக.

02. அ. பக்கச்சார்புடைய வாடிக்கையாளருடன் (Logal Customer) தொடர்பு ஏற்படும் மட்டங்களை (Relation Ship Level) குறிப்பிட்டு விளக்குக.
ஆ. விற்பனை எண்ணக்கருவிற்கும், சந்தைப்படுத்தல் எண்ணக்கரவிற்கும் இடையிலான வேறுபாடுகளை விளக்குக.
இ. விலையிடல் ஒன்றின் படிமுறைகளையும், குறிக்கோளையும் தனித்தனியாகக் குறிப்பிடுக.
ஈ. கட்டளைமுறை உற்பத்தியின் (Job product) அனுகூலங்களையும், பிரதிகூலங்களையும் குறிப்பிடுக.
உ. உற்பத்தியில் ஆராய்ச்சியினதும், அபிவிருத்தியினதும் முக்கியத்துவத்தை விளக்குக.
ஊ. மேம்படுத்தல் கலவைமாறிகளில் ஒன்றான நிகழ்வுகளும், அனுபவங்களும் (Events and Expeience) என்பதனை விளக்கி அவற்றுக்குப் பயன்படுத்தப்படும் நுட்பங்களைக் குறிப்பிடுக.

03. அ. சிறு வணிகம் ஒன்றை வெற்றிகரமாக நடத்துவதற்கு அவசியமான ஆறு காரணிகளைக் குறிப்பிடுக.
ஆ. நடுத்தர சிறிய வர்த்தகத்தின் தூரநோக்கு (Vision), இலட்சிய நோக்கு (Mission) என்பவற்றுக்கு இடையிலான தொடர்பினையும், வேறுபாட்டினையும் விளக்குக.
இ. கட்டுப்படுத்தலின் வகைகளைக் குறிப்பிட்டு விளக்குக.
ஈ. பின்வருவன பற்றிச் சிறுகுறிப்புகள் எழுதுக.
1) முன்மாதிரி நபர்கள் (Role models)
2) லங்காபுத்திர அபிவிருத்தி வங்கி (L.B.D Bank)
3) கட்டளை ஒற்றுமை (Unity of Comment)

04. அ. தரக்கட்டுப்பாடு தொடர்பாக ஏற்படும் கிரயங்கள் எவை?
ஆ. வணிகங்களைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் கடைப்பிடிக்கும் இரண்டு கொள்கைகளைத் தருக.
இ. முழுப்புடைப்பு எண்ணக்கருவின் சிறப்பியல்புகளைக் குறிப்பிட்டு விளக்குக.
ஈ. பின்வருவன பற்றிச் சிறுகுறிப்புகள் எழுதுக.
1) தர உறுதி
2) கணினி உதவியுடனான உற்பத்தி
3) திரட்டுச் சந்தை

05. அ. சந்தைப்படுத்தலில் விநியோக நடுவர்கள் ஆற்றும் கருமங்களை விளக்குக.
ஆ. பங்குத்தரகு நிறுவனங்களை ஆரம்பித்து தொழிற்படுவதற்கு காணப்பட வேண்டிய நிபந்தனைகள் யாவை?
இ. ஊழியர் நலன் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றின் மூலம் நிறுவனம் ஒன்றிற்குக் கிடைக்கக் கூடிய நன்மைகள் யாவை?
ஈ. வணிகத்திட்டம் ஒன்றின் நிதித் தேவையில் உள்ளடக்கப்படும் தகவல்கள் யாவை?

06. அ. வணிக நிறுவனங்கள் உற்பத்திக் கலவை ஒன்றினை வைத்திருப்பதற்கான காரணங்கள் யாவை?
ஆ. தொழிற்படு மூலதனப்பற்றாக்குறையினால் நிறுவனம் எதிர்நோக்கக் கூடிய நான்கு பிரச்சினைகளைக் கூறுக.
இ. நிதித்தேவையினை நிர்ணயிக்கும் போது கருத்திற்கொள்ள வேண்டிய காரணிகள் யா்வை?
ஈ. மிகை ஊழியர் நிலைமை தோன்றுவதனால் வணிக நிறுவனங்கள் எதிர்நோக்கும் விளைவுகளை விளக்குக.

-நிறைவுபெற்றது-

## அரசியல் மூல தத்துவங்கள் -III

* நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக. ஒவ்வொரு விடைக்கும் 15 புள்ளிகள் வழங்கப்படும் பகுதியாக பிரிக்கப்பட்டுள்ள வினாக்களுக்குப் புள்ளிகள் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படும்.

01. இலங்கையின் தேசிய இயக்கம் பற்றிய ஒரு விமர்சனக் கட்டுரை எழுதுக.
02. டொனமூர் சர்வசன வாக்குரிமையின் முக்கியத்துவத்தினை பரிசீலிக்குக.
03. சோல்பரி யாப்பின் கீழ் இடம்பெற்ற பின்வரும் தாபனங்களின் செயற்பாடுகளை விரித்து உரைக்குக.
1) மகாதேசாதிபதி.
2) அமைச்சரவை.
3) பாராளுமன்றம்.

நன்றி: கொழும்பு வணிகவள நிலையம்

04. 1972 யாப்பின் கீழ் பின்வருவனவற்றைப் பரிசீலிக்குக.
1) தேசிய அரசுப் பேரவை.
2) குடியரசு ஜனாதிபதி.
3) அரசியலமைப்பு நீதிமன்றம்.

05. 1978 யாப்பின் கீழ் உள்ள ஜனாதிபதி பதவியினை பின்வரும் தலைப்புக்களின் கீழ் பரிசீலிக்குக.
1) தெரிவு செய்யப்படும் முறை.
2) அதிகாரங்களும் கடமைகளும்.
3) அரசாங்க உறுதிப்பாடும் அதிகாரம் தொடர்பான விமர்சனங்களும்.

06. 1978இல் புதிய யாப்பொன்றின் உருவாக்கத்திற்கு ஆதரவாக முன்வைக்கப்பட்ட வாதங்களைப் பரிசீலிக்குக.
1) மாகாண ஆளுனரின் பணிகள்.
2) இலங்கையில் அடிப்படை உரிமைகள்.
3) ஐக்கிய நாடுகள் தாபனமும் உலக சமாதானமும்.
4) இலங்கையில் இடது சாரி இயக்கம்.

-நிறைவுபெற்றது-

இவ் வெளியீடு தொடர்பான விமர்சனங்களுக்கும் கருத்துக்களுக்கும் 071-4273035, 0716850005 என்ற கையடக்கத் தொலைபேசி இலக்கத்துடன் கா[illegible] மாலை 4.30 வரை தொடர்[illegible]

I ஆம் தொடர்ச்சி...

* 26 மூதல் 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் நான்கு கூற்றுக்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொன்றிலும் இரு கூற்றுக்கள் வினாவுக்கு பொருத்தமற்றவையாகும் பொருத்தமற்ற கூற்றுக்களின் தொகுதியை தெரிவுசெய்க.

26. 1978 இரண்டாம் குடியரசு யாப்பு
A) நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிமுறையினை அறிமுகம்.
B) அடிப்படை உரிமையினை முதலில் அறிமுகம் செய்தது.
C) இறைமைமிக்க சட்டத்துறையை அறிமுகம் செய்தது.
D) மக்கள் தீர்ப்பினை அறிமுகம் செய்தது.
1) AB 2) CD 3) BC 4) AC

27. 1978 யாப்பின் கீழ் பாராளுமன்றம்
A) இதன் உறுப்பினர்கள் எல்லோரும் மக்களால் தெரிவுசெய்யப்படுவர்.
B) 6 வருட பதவிக்காலம் கொண்டது .
C) பொதுத் தேர்தல் முடிவடைந்தவுடன் நடைபெறும் முதலாவது பாராளுமன்ற கூட்டத்தொடரில் சபாநாயகர் உபசபாநாயகர் குழுக்களின் தலைவர் என்போர் தெரிவுசெய்யப்படுவர்.
D) பாராளுமன்றத்தின் ஆயுளை மேலும் 6 வருட காலத்திற்கு மக்கள் தீர்ப்பு 2/3 பெரும்பான்மையுடனும் நீடிக்க முடியாது
1) AD 2) AB 3) CD 4) DB

28. 1978 யாப்பின் கீழ் பிரதமமந்திரி
A) மந்திரிசபையின் தலைவர்.
B) அமைச்சர்களை நீக்க நியமிக்கும் அதிகாரம் கொண்டவர்.
C) பாராளுமன்ற அங்கத்தவர்களின் கூடுதல் நம்பிக்கையை பெற்றவர் எனக்கருதும் ஒருவர் ஜனாதிபதியால் நியமிக்கப்படுவார்.
D) அமைச்சரவை கலைக்கப்பட்டால் தொடர்ந்து பதவியில் இருக்கமமுடியாது.
1) AC 2) AB 3) CD 4) BD

29. 1978 யாப்பின் கீழ் உயர் நீதிமன்றம்
A) இலங்கை குடியரசின் உயர்நிலை நீதிமன்றமாகவும் இறுதிப்பதிவேட்டு நீதிமன்றமுமாகும்.
B) அடிப்படை உரிமைகளை பாதுகாக்கும் அதிகாரம் கொண்டது.
C) ஆட்கொணர்வு மனுவினை விசாரிக்கும் அதிகாரம் கொண்டது.
D) பிரதமநீதியரசரையும் 6 பேருக்கு குறையாது 9 பேருக்குமேற்படாத நீதியரசர்களைக் கொண்டது.
1) CD 2) AB 3) BC 4) AD

30. விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் பாராளுமன்ற தேர்தல்
A) 25 தேர்தல் மாவட்டங்களிலிருந்து பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படுவர்.
B) ஒவ்வொரு கட்சியும் குழுவும் வேட்பாளர் பட்டியலை சமர்ப்பிக்கும் போது தேர்தல் மாவட்டத்தின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையுடன் மூன்று பேர் கூட்டியதாக வேட்பாளர் பட்டியல் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
C) கூடிய வாக்கைப் பெறும் கட்சி அல்லது குழு போணஸ் ஆசனத்தைப்பெறும்.
D) செல்லுபடியான வாக்குகளில் 1: 8 வீதமான வாக்கை கட்சிகள் அல்லது குழு பெற வேண்டும்.
1) AB 2) AD 3) BC 4) CD

* 31 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் இரு கூற்றுக்கள் இடம்பெறுகின்றன. ஒவ்வொரு வினாவிற்குமுரிய சோடிக்கூற்றுக்கு பின்வரும் அட்டவணையில் உள்ள 1, 2, 3, 4 என்பவற்றுள் எந்த இலக்கம் அதிகம் பொருத்துகிறது என்பதை குறிப்பிடுக.

அட்டவணை 1 இற்கான வழிகாட்டி

| இலக்கம் | கூற்று 1 | கூற்று 2 |
|---|---|---|
| 1 | உண்மை | பொய் |
| 2 | உண்மை | உண்மை |
| 3 | பொய் | பொய் |
| 4 | பொய் | உண்மை |

| | | |
|---|---|---|
| 31. | தற்போதைய யாப்பின்படி இலங்கைப் பாராளுமன்றம் 225 உறுப்பினர்களைக் கொண்டது. | 196 பேர் தேர்தல் மூலமும் 29 பேர் தேசியப் பட்டியல் மூலமும் தேரிவு செய்யப்படுவர். ( ) |
| 32. | பிரித்தானியாவிடம் இருந்து சுதந்திரம் பெற்ற அனைத்து நாடுகளும் பொது நலவாயத்தில் அங்கம் வகிக்கின்றன. | பிரித்தானிய பொதுநலவாயத்தின் [illegible]தான நோக்கங்களில்ஒன்று அங்கத்துவ நாடுகளுக்கிடையில் பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துவதாகும். ( ) |
| 33. | கம்யூனிச எதிர்ப்பே 1948- 1956 காலப்பகுயில் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் பிரதான பண்பாகும். | 1956இல் S.W.R.D பண்டாரநாயக்காவின் ஆட்சியினைத் தொடர்ந்து மேற்கைத்தைய சார்பில் இருந்து அணி சேராக் கொள்கையை நோக்கியதாக அமைந்தது. ( ) |
| 34. | 1985இல் வங்காளதேசத்தின் தலைமையில் சார்க் அமைப்பு உருவாக்கப்பட்டது. | சார்க்கின் வளர்ச்சிக்கு இந்தியாவின் மேலாதிக்க உணர்வும் இந்திய பாக்கிஸ்தான் முரண்பாடும் தடையாக இருந்தது. ( ) |
| 35. | மாகாணசபையின் ஆளுனர் சனாதிபதியால் நியமனம் செய்யப்படுவார். | ஆளுனர் ஒருவர் 6 வருடங்களுக்கு பதவிவகிப்பர். ( ) |
| 36. | ஐக்கிய தேசியக் கட்சி தேசிய காங்கிரஸ் முஸ்லீம் லீக் பௌத்த மகாசபை என்பன ஒன்றிணைந்து D.S சேனாநாயக்கா தலைமையில் உருவாக்கப்பட்டது. | ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து பிரிந்து சென்ற S.W.R.D பண்டாரநாயக்கா தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி 1956இல் ஆட்சிப் பீடம் ஏறியமை திருப்புமுனை மௌனப் புரட்சி பிரிவினைக்கோடு என வர்ணிப்பர். ( ) |
| 37. | இலங்கையில் பலகட்சி முறை உருவாகுவதற்கு பங்களித்த காரணிகளில் சமூகப் பல்லினத் தன்மையும் வகுப்பு முரண்பாடுகளும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையுமாகும். | விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை சிறியகட்சிகளும் சிறுபான்மை இனக் கட்சிகளையும் பலம் குன்றச்செய்துள்ளது. ( ) |
| 38. | பிரதம நீதியரசர் உத்தியோகபூர்வ ரீதியாக தலைவராகவும் ஏனைய இரு நீதியரசர்கள் மகாதேசாதிபதியாலும், நீதிச்சேவை ஆணை குழுவிற்கு நியமிக்கப்படுவர் மேற்கொள்ளுதல். | நீதித்துறை அதிகாரிகளை நியமித்தல் இடமாற்றம் செய்தல் பதவிநீக்கம் செய்தல் ஒழுக்கக் கட்டுப்பாடுகளை போன்ற அதிகாரங்களைக் கொண்டது. ( ) |
| 39. | அரசியல் யாப்பு நீதிமன்றம் சனாதிபதியால் நியமிக்கப்பட்ட 5 உறுப்பினர்களைக் கொண்டது. | தேசிய அரசுப் பேரவையின் செயலாளர் இன் நீதிமன்றத்தின் பதிவாளராக கடமையாற்றினார். ( ) |
| 40. | ஐக்கிய நாடுகள் தாபனத்தில் 192 நாடுகள் அங்கம்வகிக்கின்றன. | பாதுகாப்புச்சபையின்ரத்து அதிகாரத்தை பாவிக்கும் அதிகாரம் ஐந்து வல்லரசு நாடுகளுக்குமே உண்டு. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணனி அன்பளிப்பு

நவாலி,ஜூன்23

வட்டுக்கோட்டை பிரதேச அரசினர் வைத்தியசாலைக்கு வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபையினர் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான கணனி ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். (203-100)

## வலி. கிழக்குப் பிரதேசத்தில் 45 அபி. சங்கங்கள் புனரமைப்பு

கோப்பாய்,ஜூன்23

வடமாகாண கிராம அபிவிருத் திணைக்கள திருத்தப்பட்ட யாப்பு விதியின் பிரகாரம் வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் 45 கிராம மாதர் அபிவிருத்திச் சங்கங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்மூலம் இவற்றின் பணிகள் தற்போது சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (203-72)

## புலோலியூர் க.சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூன்23

புலோலியூர் க.சதாசிவம் குடும்பத்தினரின் அனுசரணையுடன் ஞானம் சஞ்சிகையினாற் சதாசிவம் ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டியொன்று வருடாந்தம் நடத்தப்பட்டு வருகிறது.

இவ்வருடம் நடைபெறும் போட்டிக்கான சிறுகதைகளை அனுப்பவேண்டிய இறுதித்திகதி 30.08.2009 ஆகும்.

இப்போட்டிக்கு வயதுக் கட்டுப்பாடுகள் இன்றி எவரும் விரும்பிய தலைப்பில் கதையை அனுப்ப முடியும்.

முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக முறையே 3ஆயிரம், 2ஆயிரம், ஆயிரம் ரூபாக்கள் வழங்கப்படும்.

ஏனைய ஒன்பது கதைகளுக்குத் தலா 500 ரூபா வீதம் வழங்கப்படும்.

முன்னர் பிரசுரமான கதைகள் போட்டியிற் சேர்த்துக்கொள்ளப்படமாட்டா.

கடித உறையின் இடதுபக்க மூலையில் கலாபூஷணம் புலோலியூர் க.சதாசிவம் ஞாபார்த்தச் சிறுகதைப் போட்டி- 2009 எனக் குறிப்பிடல்வேண்டும்.

அனுப்பவேண்டிய முகவரி *ஞானம் கிளை அலுவலகம், 3-B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு- 06.*(203-55)

## வெங்காயப் பயிரில் நோய்த்தாக்கம்

யாழ்ப்பாணம்,ஜூன்23

கோப்பாய், நீர்வேலி பகுதிகளில் விவசாயிகளால் பயிரிடப்பட்ட வெங்காயப் பயிர்கள் ஒருவித நோய்த்தாக்கத்திற்கு இலக்காகிக் காணப்படுகிறன.

இதனால் இவை வாடிய நிலையில் உள்ளதாகக் கூறப்படுகிறது. நோயைக் கட்டுப்படுத்த விவசாயிகள் கிருமிநாசினிகளை விசிறி வருகின்றனர். (203-224)

## நவாலி பிரசாத் சந்தையில் மலசலகூட வசதி இல்லை

நவாலி,ஜூன்23

நவாலி பிரசாத் சந்தையில் மலசலகூட வ்சதிகள் இல்லாமையால் வியாபாரிகளும் பாவனையாளர்களும் பெரும் அவலங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது.

நீண்டகாலமாகப் புனரமைப்புச் செய்யப்படாது இருந்த இச்சந்தை அண்மையில் நவீன முறையில் புனரமைப்புச் செய்யப்பட்டு தற்போது பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

ஆனால் மலசலகூட வசதி செய்து கொடுக்கப்படவில்லை. உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனமெடுக்க வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (203-100)

## மீன்பிடித் தடை நீக்கப்பட்டதையடுத்து உபகரணக் கொள்வனவில் தொழிலாளர் நாட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்23

மீன்பிடிக்கான தடைகள் முற்றாக நீக்கப்பட்டதையடுத்து மீன்பிடி உபகரணங்களைக் கொள்வனவு செய்வதில் கடற்றொழிலாளர் மும்முரம்காட்டி வருகின்றனர்.

இதுவரை காலமும் கடற்றொழில் உபகரணங்கள் விற்பனை செய்யப்படும் வர்த்தக நிலையங்கள் தேடுவார் அற்ற நிலையிலேயே காணப்பட்டன.

கடற்றொழிலுக்கான தடை முற்றாக நீக்கப்பட்டதை அடுத்து கடற்றொழில் உபகரணக் கொள்வனவு அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில் கடற்றொழிலாளர்களுக்குத் தேவையான உபகரணங்கள் போதியளவில் இங்கு இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை காலமும் கடற்றொழிலுக்கான உபகரணங்களை எடுத்து வருவதில் எவரும் நாட்டம்காட்டாமையால் அவற்றுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகக் கூறப்படுகிறது.

கடற்றொழிலாளர் இதுவரைகாலமும் பயன்படுத்தாது வைத்திருந்த றோலர்கள் மற்றும் படகுகளையே திருத்திப் பயன்படுத்தவுள்ளனர். அவற்றைத் திருத்தும் பணியிலும் ஈடுபட்டு வருகின்றனர். (203-224)

## பெத்தனாச்சி அம்மன் ஆலயச் சூழலுக்கு மின்சாரம் வழங்குவதற்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்23

நவாலி வடக்கு, பெத்தனாச்சி அம்மன் ஆலயச் சூழலுக்கு விரைவில் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி எ.அ.யோகநாயகம் தெரிவித்துள்ளார்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிஉரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் தெரிவித்தவை வருமாறு:

வலி.தென்மேற்குச் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மீண்டும் கசிப்பு உற்பத்தி அதிகரித்து வருகின்றது.

உற்பத்தி - விற்பனையில் ஈடுபடுபவர்களை அவ்வப்பகுதி கிராமிய மக்கள், பொது அமைப்புகள் இனங்கண்டு அறியத் தரவேண்டும் - என்றார்.

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டமானது புனர்வாழ்வு - புனரமைப்புத் திட்டத்தின்கீழ் முன்னுரிமைப் பிரகாரம் அபிவிருத்தி செய்யப்படும்.

அதற்கான முன்மொழிவுகள் - முன்வரைபுகள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொருவரும் தமது வீட்டு சூழலை சுத்தமாக வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். இதன்மூலம் டெங்கு பரவுவதைத் தடுக்கமுடியும்.

அதேபோல் - கல்வி இன்று எமது சமூகத்தில் எழுந்துள்ள முக்கிய பிரச்சினை.

ஒவ்வொரு மாணவனும் கல்வியில் அக்கறை செலுத்தவேண்டும். மாணவர் இடைவிலகலைக் குறைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மேற்படி கூட்டத்தில் அபிவிருத்தி திட்டங்கள் குறித்து முன்மொழியப்பட்டது.

இக்கூட்டத்தில் அபிவிருத்தி இணைப்பாளர் திருமதி சி.பொன்மதி, விவசாய போதனாசிரியர் திருமதி பி.மணிவண்ணன் உட்பட 34 அதிகாரிகள் கலந்துகொண்டனர். (203)

## மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட 9 வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன

யாழ்ப்பாணம்,ஜூன்23

மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் உள்ள ஒன்பது வீதிகள் விரைவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

மீள் புனரமைப்புப் பணிகள் பிரதேச சபை நிதி, மாகாண நன்கொடை நிதி, தமிழ் அகதிகள் புனர்வாழ்வு நிதி ஒதுக்கீடுகளின் கீழ் இடம்பெறவுள்ளன.

இதன்மூலம் மாதகல் சென்.தோமஸ் வீதி, பண்டத்தரிப்பு பற்றிமா வீதி, மானிப்பாய் சிந்மயபாரதி - முத்துத்தம்பி வீதி, பண்டத்தரிப்பு கேணிக்கரை வீதி, இலங்கா மாதாவீதி, மானிப்பாய் கட்டாப்பாலி வீதி, நவாலி வடக்கு - நாச்சிமார் வீதி, பண்டத்தரிப்பு ஏழு புளியடிவீதி, பண்டத்தரிப்பு ஆஸ்பத்திரி வீதி ஆகியன விரைவில் மானிப்பாய் பிரதேச சபையால் மீள்புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இதேவேளை - வீதி அபிவிருத்தி அதிகார சபையால் பண்டத்தரிப்பு வெள்ள வாய்க்கால் விரைவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேற்படி வீதி புனரமைப்புக் குறித்து உரிய அதிகாரிகள் சண்டிலிப்பாய் பிரதேச செயலருக்கு அறிவித்துள்ளனர். (9)




## வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 'சம்பத்' வங்கி 10 கிளைகளைத் திறக்கவுள்ளது

யாழ்ப்பாணம்,ஜூன்23

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 'சம்பத்' வங்கி வடபகுதியில் பத்துக் கிளைகளைத் திறந்துவைக்கவுள்ளது.

இதன் ஆரம்பக் கட்டமாக அடுத்த மாதம் யாழ்ப்பாணத்தில் முதலாவது சம்பத் வங்கிக் கிளை திறந்துவைக்கப்படவுள்ளது.

இந்தக் கிளைக்கு யாழ்.குடாநாட்டைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

அடுத்த மாதம் மன்னாரிலும் ஒரு கிளை திறந்துவைக்கப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து வடபகுதியில் மொத்தம் 10 கிளைகள் திறக்கப்படவுள்ளன. (203)

## பன்றித் தீவனம் கால்நடை உணவாக.

இணுவில்,ஜூன்23

கோதுமைத் தவிட்டினால் செய்யப்பட்ட பன்றித் தீவனம் யாழ்ப்பாணக் கடைகளில் கால்நடைத் தீவனமாக விற்பனை செய்யப்படுகிறது.

போதிய போசாக்கு மூலக்கூறுகள் இல்லாத இத்தீவனம் கால்நடைகளுக்கு உகந்ததல்ல என கால்நடை சுகாதார வைத்தியப் பகுதியினர் தடை செய்திருந்தனர்.

அதையும் மீறி எந்தவித வர்த்தகக் குறியீடும் இன்றி நல்ல முறையில் பொதி செய்து இந்த மோசடி விற்பனை நடைபெறுகிறது.

கொழும்பில் இருந்து தருவிக்கப்படும் கால்நடைத் தீவனத்தின் வடிவிலேயே இத்தீவனமும் காணப்படுவதால் பொது மக்கள் மிக இலகுவாக ஏமாந்து போகிறார்கள் என்று கூறப்படுகிறது. (203-45)

## 180 நாள்களில் முடிக்கப்படவேண்டிய 10 கருத்திட்டங்கள் முன்வைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்23

நவாலி வடக்கு கிராமத்தில் 180 நாள் வேலைத்திட்டத்தின்கீழ் செய்து முடிக்கப்படவேண்டிய கருத்திட்டங்களைக் கிராம அலுவலர் அ.தனபாலரத்தினம் முன்வைத்துள்ளார்.

'வடக்கின் வசந்தம்' திட்டத்தின் கீழ் முக்கியமாக முன்மொழிந்த திட்டங்கள் சண்டிலிப்பாய் பிரதேச செயலரிடம் வழங்கப்பட்டுள்ளன.

வழங்கப்பட்ட கருத்திட்டங்கள் வருமாறு:

* நவாலி வடக்கு நாச்சிமார் வீதி உட்பட 3 பிரதேசசபைக்கு உட்பட்ட வீதிகள் திருத்தம்.
* நவாலி இடிகுண்டு மீள்புனரமைப்பும் - பாரிய நீர்த்தாங்கி அமைத்தலும்.
* நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை மீள்புனரமைப்பு.
* மற்றும் கல்வி, சுகாதாரம், நலன்புரி சேவைத்திட்டம் உட்பட 10 முன் கருத்திட்டங்களை முன்வைத்துள்ளார். (203)

## மாகாண மட்டக் கவிதைப் போட்டி யாழ்ற்ரன் கல்லூரி மாணவனுக்கும் இடம்

யாழ்ப்பாணம்,ஜூன்23

மாகாண மட்டத்தில் இடம்பெற்ற கவிதைப் போட்டியில் சிரேஷ்ட பிரிவில் காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி மாணவன் செல்வன் வி.பாலேந்திரன் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

காரைநகர் பிரதேச செயலக மட்டத்தில் இடம்பெற்ற போட்டியில் முதலாம் இடத்தையும் மாவட்ட மட்டத்தில் இடம்பெற்ற போட்டியில் முதலாம் இடத்தையும் பெற்று மாகாண மட்டப் போட்டியில் பங்குபற்றி மூன்றாம் இடத்தை இந்த மாணவன் பெற்றுக்கொண்டார். (203-250)

## வியாவில் ஒழுங்கையில் மீன்சந்தையால் நெருக்கடி

நவாலி,ஜூன்23

ஆனைக்கோட்டை, வியாவில் ஒழுங்கையில் மாலைநேர மீன்சந்தை நடைபெறுவதால் போக்குவரத்திற்குப் பல இடைஞ்சல்கள் ஏற்பட்டுள்ளன.

ஆனைக்கோட்டையில் இருந்து சாவற்கட்டுக்குச் செல்லும் இவ் ஒழுங்கை மிகவும் சிறியதாகும். அங்கு மீன் வியாபாரிகள் ஒருபுறமும் மறுபுறத்தில் பயணிகளின் வாகனங்களும் ஒழுங்கையை நெருக்கடி செய்கின்றன.

சம்பந்தப்பட்டவர்கள் அங்குள்ள காணிகளிலொன்றில் இவர்களை வியாபாரம் செய்ய அனுமதிப்பதன் மூலம் மக்களுக்கும் வியாபாரிகளுக்கும் வசதியாக இருக்கும் என்று கூறப்படுகிறது. (203-100)



காரைநகர் - வட்டுக்கோட்டை - மூளாய் பகுதியை இணைக்கும் பொன்னாலைப் பாலம் அகலமாக்கும் பணிகள் தற்சமயம் நடைபெற்று வருகின்றன. 22 அடி அகலமுள்ள இந்தப் பாலம் 33 அடியாக விஸ்தரிக்கப்படவுள்ளது. பாலத்தை அகலமாக்கும் பணியில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் ஈடுபட்டிருப்பதைப் படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபை ஊழியர்களும், பொதுமக்களும் இணைந்து திருநெல்வேலி பாரதிபுரம் கேணியடி ஒழுங்கையில் சிரமதானப் பணிகளை முன்னெடுத்தபோது எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்:லக்ஸ்மன்)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், ஜூன் 23

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் மேற்படி கல்லூரி அதிபர் திருமதி சி.அனந்தசயனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ். கே.யோகநாதன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சற்குணானந்தம் கைலாசநாதன் கலந்து கொள்வார்.

நினைவுப் பேருரையை வலிகாமம் கல்வி வலய கல்வி அபிவிருத்திப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி சறோஜினி தேவி நாகராசா வழங்குவார். (201)

# அரசிடம் தமிழர்களுக்கான தீர்வுத் திட்டம் இல்லை

## ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 23

''தமிழர்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை முன்வைப்போம் என அரசு கூறி வருகிறது. ஆனால் தமிழர்களுக்கு என்றொரு தீர்வு அரசிடம் இல்லை. அது வெறும் கபட நாடகமே''.

இவ்வாறு ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்காவே மேற்கண்டவாறு குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

தமிழர்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு முன்வைக்கப்படும் என அரசு கூறி வருகிறது. ஆனால் அரசிலுள்ள தேசிய சுதந்திர முன்னணி, ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் அரசியல் தீர்வு ஒன்று வழங்கக்கூடாது எனக் கூறி வருகின்றன.

எனவே, தமிழர்களுக்கு அரசியல் தீர்வு அரசிடம் இல்லை. அந்த அரசியல் தீர்வு என்ன என்பது அரசுக்கே தெரியாது. எங்களுக்கும் தெரியாது.

தமிழர்களுக்கு என்ற அரசியல் தீர்வு என்பது ஒரு கபட நாடகம். அவ்வாறு ஒரு அரசியல் தீர்வு என்னவென எமக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

13 ஆவது அரசியல் திருத்தச் சட்டம் அரசினால் உருவாக்கப்பட்டது. அதை நிறைவேற்ற வேண்டியது அரசின் கடமையாகும். 13ஆவது அரசியல் திட்டத்தையோ அல்லது அதற்கு அப்பால் சென்று தீர்வுத்திட்டத்தையோ வழங்க அரசு முயற்சித்தால் அதற்கு நாம் பூரண ஆதரவளிப்போம்-என்றார். (சி)

# மேற்குலக அழுத்தத்தாலேயே நாணய நிதியக் கடன் தாமதம்!

## மத்திய வங்கி ஆளுநர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 23

சர்வதேச நாணய நிதியத்தின் மீது அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளின் அழுத்தம் காரணமாகவே இலங்கைக்கான கடன்தொகை தாமதமடைந்து வருகின்றது என்று மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் கப்ரல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

சர்வதேச நாணய நிதியத்தின் மீது அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகள் மேற்கொள்ளும் அழுத்தம் காரணமாகவே இலங்கைக்கான கடன்தொகை தாமதமடைந்து வருகின்றது.

முன்னர் எமக்கு இந்த நிதியின் தேவை அதிகமாக இருந்தது. ஆனால், தற்போது அதன் அவசியம் குறைந்துள்ளது. நாங்கள் வேறு இடங்களில் இருந்து எமது நிதித் தேவையை பெற்று வருகின்றோம். வெளிநாடுகளில் உள்ள இலங்கை மக்களிடம் இருந்தும் நிதி உதவிகளைத் திரட்டி வருகின்றோம்.

நாம் இந்த நிதி உதவியை ஏப்ரல் மாதம் கேட்டிருந்தோம். அதன் தேவை ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் அதிகம் ஏற்பட்டிருந்தது. ஆனால், அது தவறினால், ஏற்படும் நெருக்கடிகளை சமாளிப்பதற்கு நாம் வேறு ஒரு திட்டத்தையும் கொண்டிருந்தோம். ஆனால், அதனை நாம் தெரிவிக்கமாட்டோம்.

இலங்கையின் அபிவிருத்தி முறிகள் இரண்டை ஏற்படுத்தி 5 கோடி டொலர்களைப் பெற்றுள்ளோம். வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு வங்கிகளிடம் இருந்து 10 கோடியே 18 லட்சம் டொலர்களையும் மத்திய வங்கி பெற்றுள்ளது.

நாணய நிதியத்தின் நிதி உதவிகள் தடைப்படுவதற்கு அரசியல் அழுத்தங்களே காரணம் - என்றார் அவர்.

## உற்பத்தித்திறன் வளவாளருக்கு விண்ணப்பம் கோரல்

தொழில் உறவுகள் மற்றும் மனிதவலு அமைச்சின் தேசிய உற்பத்தித்திறன் செயலரும் வளவாளர் குழாம் ஒன்றை உருவாக்கவுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்கு உற்பத்தித்திறன் பற்றிய அறிவை ஏற்படுத்தும் நோக்கில் உற்பத்தித்திறன் வளவாளரைப் பயிற்றுவிப்பதற்காக செயலாறுகைத்திறன் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இளைப்பாறிய அரசசேவை உத்தியோகத்தர்களும் விண்ணப்பிக்க முடியும். பட்டப்படிப்பு அல்லது அதற்கு சமமான கல்வித்தரம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தங்களது முழு விவரங்கள் அடங்கிய சுயவிவரக் கோவையை எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்பதாக நல்லூர் பிரதேச செயலக மனிதவள அபிவிருத்தி உதவியாளரிடம் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு ஒகஸ்ட் மாத நடுப்பகுதியில் இரண்டு தினங்கள் பயிற்சி வகுப்பு நடைபெறும் என நல்லூர் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (201)

## ௬0 ஆவது பிறந்தநாள் நினைவலைகள்



மலர்வு: 23.06.1949

உதிர்வு: 20.01.2008

**அமரர் அந்தோனி பர்னாந்து செபமாலைமுத்து**

(பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ்.பல்கலைக்கழகம்)

பப்பா,
நிஜத்தில் உங்களுக்கு வாழ்த்துக்கள்
கூற முடியாது விட்டாலும்-எங்கள்
உள்ளத்தாலும், கண்ணீராலும் உங்களுக்கு வாழ்த்துக்கள்
கூறுகின்றோம்.

இல. 27/23, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவில்:
குடும்பத்தினர்.

# சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 6 லட்சத்துக்கு முதற்கட்ட வேலைத்திட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 23

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 6 லட்சம் ரூபாவுக்கான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூ தெரிவித்தார்.

முதற்கட்டமாகத் தெரிவுசெய்யப்பட்டு அனுமதிக்கப்பட்ட 9 வேலைத் திட்டங்களின் விவரம் வருமாறு:

* சென்.கென்றிஸ் பாடசாலை - அலுவலக உபகரணக் கொள்வனவு.
* மானிப்பாய் சென்.ஆன்ஸ் பாடசாலை அலுவலக உபகரணக் கொள்வனவு.
* ஆனைக்கோட்டை ஆர்.சி.ரி.எம் இற்கு இசைக்கருவிகள்.
* அடைக்கலநாயகி முன்பள்ளி - விளையாட்டு உபகரணம்.
* பெண்கள் கடன் கூட்டுறவுச் சங்கம் - தளபாடம்.
* சென்.ஜேம்ஸ் அபி.சங்கம் - அபிவிருத்தி வேலைகள்.
* அநாதை சிறுவர் இல்லம் - தொலைக்காட்சிப் பெட்டியும் உபகரணமும்.
* H.F.C வித்தியாலயம் - அலுவலகம் உபகரணம்,
* மாதகல் சென். ஜோசப் வித்தியாலயம் - தளபாடம்.

அனுமதிக்கப்பட்ட வேலைகள் தொடர்பான நிறுவனத் தலைவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (203)

## யாழ்.பல்கலை மணவர் கூட்டம்

யாழ்.பல்கலைக் கழக மாணவர் ஒன்றியப் பொதுக் கூட்டம் இன்று செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. மேற்படி கூட்டத்துக்கு அனைத்து பீட மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (201)

# மரண அறிவித்தல்

## லேயோப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை



பருத்தித்துறை, வெளிச்சவீட்டு ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை 18.06.2009 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற லூர்த்தம்மாவின் அன்புக் கணவரும் மரியநாயகி (தவம்), அன்ரனி வின்சன் மரியநாயகம் (ரஞ்சன்), ஸ்ரெலாறூபி(செல்வதி) ஆகியோரின் பாசமுள்ள தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23.06.2009) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் புனித தோமையார் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும். இரங்கல் திருப்பலியின் பின்னர் வெளிச்சவீட்டு ஒழுங்கை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

வெளிச்சவீட்டு ஒழுங்கை,
பருத்தித்துறை.

(86470)

## கண்ணீருடன் ஒன்பது ஆண்டின் நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 01 | 03 |
| 06 | 07 |
| 1933 | 2000 |

**அமரர் கந்தையா மயில்வாகனம் (பொலிஸ்பப்பா)**

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

திதி: பிரதமை 23.06.2009

ஒன்பது ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் ஒருகணமும் மறக்கமுடியவில்லை
அணையாத தீபமாய் என் நெஞ்சில் ஒளிவீசும் அன்புத் தெய்வமே
துணையாக இருப்பீர்கள் என்று தூக்கத்திலும் துணிவு கொண்டேன்
பக்கம் நீங்கள் இருந்தால் சொர்க்கம் தோன்றுதே
நீங்கள் சொர்க்கம் சென்றதால் துக்கம் தாங்குதில்லை
துக்கம் குடிகொண்டதால் தூக்கம் இன்றித் தவிக்கிறேன்
நீங்கள் காட்டிய பாசத்தை நினைத்துக் கலங்குகிறேன்
இனியும் என்னைக் கலங்கவிடாமல் நீங்கள் சென்ற இடம்
என்னையும் அழையுங்கள்
என்றும் உங்கள் நினைவில் கலங்கிக் கண்ணீருடன்
நடைப் பிணமாக வாழ்கிறேன்
என்றும் உங்கள் ஆத்மா சாந்திபெற சந்நீதி முருகனைத்
தினம் தினம் வேண்டுகிறேன்

பழைய பாலத்தடி,
தொண்டைமானாறு.

திருமதி ம.பரமேஸ்வரி
(மனைவி).

(86263)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## அமரர் சுப்பிரமணியம் நாகராஜா

**(Retired MSO, Jaffna Post Office)**

நல்லூரைப் பிறப்பிடமாகவும் கந்தர் மடம், பலாலி வீதியை வதிவிட மாகவும் கொண்ட திரு.சுப்பிரமணியம் நாகராஜா கடந்த 21.06.2009 ஞாயிற்றுக் கிழமை கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற அமரர்கள் சுப்பிரமணியம்-நாகம்மாவின் சிரேஷ்ட புதல்வனும், மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், மகேசன் (பிரான்ஸ்), சகுந்தலா (நோர்வே), சுபத்திரா (கனடா), சூரியகுமார் (நோர்வே), வத்சலா (கனடா), வாசுகி (நோர்வே), உதயகுமார் (சுவிஸ்), விஜயகுமார் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நர்த்தலி (பிரான்ஸ்) செல்வராசா (நோர்வே), மோகன் (கனடா), கதிர்ச்செல்வன் (கனடா), ஜெரால்ரின் (நோர்வே), ரமேஸ் (நோர்வே), நிருபா (சுவிஸ்), சுகன்னியா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் நிசாந்தி (நோர்வே), லியா (பிரான்ஸ்), விதுசா (கனடா), விதுசன் (கனடா), சுகிர்தன் (கனடா), தாட்சாயினி (கனடா), நிரோஜன் (நோர்வே), பிருந்தா (நோர்வே), கிறிஷாந் (நோர்வே), சஞ்ஜே (நோர்வே), அஜே (நோர்வே), தீபிகா (சுவிஸ்), வினுஸ் (சுவிஸ்), அங்கணி (சுவிஸ்) ஆகியோரின் அருமைப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் தொடர்பான விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கச்சதீவுப் பிரச்சினையைவிட தி.மு.க.வை எதிர்ப்பதிலேயே அ.தி.மு.கவுக்கு அக்கறை

## முதல்வர் கருணாநிதி குற்றச்சாட்டு



சென்னை, ஜூன் 23

கச்சதீவுப் பிரச்சினை தீரவேண்டும் என்பதை விட, தி.மு.கவை எதிர்க்க வேண்டும் என்பதிலேயே அ.தி.மு.கவினர் அதிக அக்கறையாக இருக்கின்றனர் - என்று முதல்வர் கருணாநிதி குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது குறித்து நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

தமிழக முதல்வராக நான் இருந்த போது, கச்சதீவுக்காக பெரிய அளவில் ஏன் போராட்டம் நடத்தவில்லை என்று ஜெயலலிதா கேள்வி எழுப்பியுள்ளார்.

தி.மு.க. ஏன் போராடவில்லை என்று கேட்கும் ஜெயலலிதாவைத் திரும்பக் கேட்கிறேன், 1991ஆம் ஆண்டு ஜெயலலிதா முதல்வராக வந்ததும், கோட்டையில் கொடியேற்றி விட்டு கச்சதீவை மீட்டே தீருவேன் என்று முழங்கினார்.

அதன்பின், ஐந்தாண்டு காலமும், 2001ஆம் ஆண்டு முதல் 2006ஆம் ஆண்டு வரை மீண்டும் ஐந்தாண்டு என பத்தாண்டு காலம் முதல்வராக ஜெயலலிதா இருந்தாரே, அப்போது ஏன் அவர் கச்சதீவுக்காகப் போராட்டம் நடத்தவில்லை?

அப்படி போராட்டம் எதுவும் நடத்தாத நிலையில் தி.மு.கவைப் பார்த்து ஏன் போராட்டம் நடத்தவில்லை என்று கேட்க அவருக்கு என்ன தகுதி இருக்கிறது?

கச்சதீவை இந்தியா இலங்கைக்குத் தாரை வார்க்கப் போகிறது என்பது கருணாநிதிக்கு முன்கூட்டியே தெரிந்திருந்தும், அதை ஏன் எதிர்க்கவில்லை என்கிறார் ஜெயலலிதா.

கச்சதீவை இலங்கைக்கு இந்தியா வழங்கப் போகின்ற தகவல், அதற்கு முன்பு பல ஆண்டுகளாக செய்தி அளவிலேதான் இருந்தது.

எதையும் லட்சியம் செய்யாமல் என்னை (கருணாநிதி) அழைத்து இதுபற்றி ஒரு வார்த்தை கூடப் பேசாமல், கச்சதீவை இலங்கைக்குத் தானம் செய்திருக்கிறார் பிரதமர் என்று ஒரு நிகழ்ச்சியில் பேசும்போது கூறினேன்.

சட்டப் பேரவையில் கருணாநிதி ஏன் தீர்மானம் கொண்டு வரவில்லை என்று ஜெயலலிதா கேட்டிருக்கிறார்.

கடந்த 1974 ஒகஸ்டில் சட்டப் பேரவையில் நானே அதற்கான தீர்மானத்தை முன்மொழிந்தேன். இப்படித் தீர்மானம் நிறைவேற்றியதைத் தெரிந்து கொண்டு, மத்திய அரசு கச்சதீவை இலங்கைக்குக் கொடுப்பதற்கு முன்பே ஏன் தீர்மானம் நிறைவேற்றவில்லை என்று இப்போது கேட்கிறார்.

அப்போது, கச்சதீவை திரும்பப் பெறுவதற்கான தீர்மானத்தை ஆளுங்கட்சியான தி.மு.க. கொண்டுவந்தபோது, எதிர்க்கட்சியாக இருந்த அ.தி.மு.க. அதனை ஆதரிக்காமல் வெளிநடப்பு செய்தது.

இதைத் தொடர்ந்து அதே ஆண்டு தலைமைச் செயலகத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசியதன் அடிப்படையில் பிரதமருக்குக் கடிதமும் எழுதினேன்.

கச்சதீவில் கண்காணிப்பு கோபுரம் அமைக்கும் ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன என பத்திரிகைகளில் வெளியான செய்தியை இலங்கைத் தூதரகம் மறுத்துள்ளது.

அதைப் படிக்காமல், ஜெயலலிதா அறிக்கை வெளியிட்டிருப்பது அவருடைய அறியாமையைத்தான் காட்டுகிறது.

நடைபெற்றுக் கொண்டிருக்கும் சட்டப் பேரவைக் கூட்டத் தொடரில், கச்சதீவு பிரச்சினைக்காக தமிழக அரசின் சார்பில் தீர்மானம் கொண்டு வந்தால், அதனை ஆதரிக்க அனைத்து எதிர்க் கட்சிகளும் தயாரா எனக் கேட்டதற்கு, அந்தக் கட்சியினர் எந்தப் பதிலும் சொல்லவில்லை.

அதிலிருந்தே, அவருக்கு கச்சதீவுப் பிரச்சினை தீரவேண்டும் என்பதை விட ஆளுங்கட்சியை எதிர்க்க வேண்டும் என்பதிலேதான் அக்கறை என்பது புரிகிறது அல்லவா - என்றுள்ளது.

# நாம் தோற்றதில் வருத்தமில்லை புலிகள் தோற்றமைதான் கவலை

## மனம் வெதும்புகிறார் வைகோ

சென்னை, ஜூன் 23

நாங்கள் தேர்தலில் தோல்வியடைந்து விட்டோம் என்று வருத்தப்படவில்லை. புலிகள் தோற்று விட்டார்களே என்ற கவலைதான் இருந்தது. எனினும் அவர்கள் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவார்கள். புலிகளை அழிக்க முடியாது.

- இவ்வாறு ஈழத் தமிழ் ஆதரவாளரும், ம.தி.மு.க. பொதுச் செயலருமான வைகோ மனம் வெதும்பிப் பேசினார்.

நேற்றுமுன்தினம் சேலத்தில் நடைபெற்ற ம.தி.மு.க. செயல்வீரர் கூட்டத்தில் சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அப்போது அவர் மேலும் கூறியவை வருமாறு -

ம.தி.மு.கவை அழிக்க வேண்டும் என்று முதல்வர் கருணாநிதி இன்றுவரை ஈடுபட்டு வருவது அனைவருக்கும் தெரியும். ம.தி.மு.கவை அழிக்க சேலத்தில் ஒத்திகை பார்க்கப்பட்டது. ஆனால் அது நடக்கவில்லை.

எங்களை அழிக்க நினைத்த கருணாநிதி



தோற்றுப்போனார். ஆனால் எந்தவொரு காலகட்டத்திலும் அ.தி.மு.க. எங்களை அழிக்க நினைக்கவில்லை. ம.தி.மு.கவை யாராலும் அழிக்க முடியாது.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் என்னைத் தோற்கடிக்க 50 கோடி தேவைப்பட்டு இருக்கிறது. 11ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் தோற்றிருக்கிறோம். கௌரவமான தோல்வியைத்தான் நாங்கள் பெற்று இருக்கிறோம்.

நாங்கள் தோல்வி அடைந்து விட்டோம் என்று வருத்தப்படவில்லை. புலிகள் தோற்றுவிட்டார்களே என்ற கவலைதான் இருந்தது. அவர்கள் தொடர்ந்து யுத்தத்தை நடத்துவார்கள். புலிகளை அழிக்க முடியாது - என்றார்.

# ஜனாதிபதி மஹிந்த கூறும் கருத்தின்படி அங்கு போர் தொடருமென்றே அர்த்தம்

## கௌத்தூர்மணி தெரிவிப்பு

கோவை, ஜூன் 23

தமிழீழப் பிரச்சினை தற்காலிகமாக ஓய்ந்திருக்கிறது. ஆனால், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்னும் ஒரு லட்சம் சிங்களவர்களை இராணுவத்தில் சேர்க்க வேண்டும் என்று கூறுகிறார். அப்படி என்றால் அங்கு போர் தொடரும் என்றுதானே அர்த்தம் - என்று பெரியார் திராவிட கழக தலைவர் கௌத்தூர் மணி கேள்வி எழுப்பியுள்ளார்.

கோவை புலியகுளத்தில் தமிழர் உரிமை முன்னணி சார்பில் ஈழ ஆதரவாளர் மாநாடு நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அவர் கூறியவை வருமாறு -

தமிழ் ஈழப் பிரச்சினை தற்காலிகமாக ஓய்ந்திருக்கிறது. பிரபாகரன் இருக்கிறாரா? இல்லையா? இலங்கையில் தொடர்ந்து போர் நடக்குமா? என்ற கருத்துக்கள் நிலவுகின்றன.

மஹிந்த ராஜபக்ஷ இன்னும் ஒரு லட்சம் சிங்களவர்களை இராணுவத்தில் சேர்க்க வேண்டும் என்று கூறுகிறார். அப்படி என்றால் அங்கு போர் தொடரும் என்றுதானே அர்த்தம்

பெரியார் திராவிடர் கழகத்தை தடை செய்யப்போவதாக தகவல்கள் வருகின்றன. அப்படி தடை செய்யப்பட்டால் நாம் வேறு பெயரில் இயக்கம் நடத்த வேண்டிய கட்டாயம் ஏற்படும். அப்போது அந்த இயக்கத்திற்கு என்ன பெயர் வைப்பது? அதை அரசே முடிவு செய்யட்டும் - என்றார்.

இக்கூட்டத்தில் இயக்குநர் சீமான் கலந்து கொண்டு பேசியவை வருமாறு -

எங்களை தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்வதற்கு என்ன காரணம்? நாங்கள் செய்த தவறு என்ன? அமெரிக்கா ஐரோப்பிய நாடுகளில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு தடை விதிக்கப்பட்டிருந்தாலும், அங்குள்ள மக்கள் இலங்கையில் நடந்த இனப்படுகொலையை எதிர்த்து போராட சுதந்திரம் இருக்கிறது, அனுமதி இருக்கிறது.

அந்த நிலை இங்கு உள்ளதா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஈழத்தில் மட்டும் தமிழர்கள் அடிமைப்பட்டு கிடக்கவில்லை.

விடுதலைப் புலிகளுக்கு தடை விதிக்க அவுஸ்திரேலியா அரசு மறுத்து விட்டது. இலங்கையில் விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்டு விட்டார்கள் என்று சொல்கிறார்கள்.

அப்படியிருக்கும்போது இல்லாத இயக்கத்துக்கு எதற்கு தடைவிதிக்க வேண்டும் என்று இந்திய அரசை அவுஸ்திரேலிய அரசு கேட்கிறது. அவுஸ்திரேலியாவின் இந்த முடிவை நாங்கள் வரவேற்கிறோம் - என்றார்.

# ஈழத்தில் இன விடுதலைத் தாகம் தேடி எந்த ரூபத்திலாவது போர் வெடிக்கலாம்

## சத்தியராஜ் சொல்கிறார்



ஈழத்தில் தேவை இன விடுதலை. அதற்காக எந்த ரூபத்திலாவது போராட்டம் வெடித்துக் கொண்டுதான் இருக்கும். இனிமேலாவது தமிழர்களுக்கு சம உரிமை வழங்கினால்தான் சிங்களவர்களுக்கு நல்லது. மறுபடியும் ஒரு புரட்சி வெடித்தால் அது அசுர வேகத்தில் வரும் - என்று தமிழின உணர்வாளரும் நடிகருமான சத்தியராஜ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக தமிழ்நாட்டில் இருந்து வெளிவரும் குமுதம் வார இதழுக்கு அவர் அளித்த பேட்டியின் விவரம் வருமாறு -

கே - இத்தனை நாளும் ஈழத்திற்காக குரல் கொடுத்த திரையுலகம் இன்று போர் முடிந்து, தமிழர்கள் இரும்புக் கொட்டடிக்குள் உணவின்றி, மருந்தின்றி, உடையின்றித் துன்பப் படும்போது மௌனமாக இருக்கிறதே?

ப - நீங்கள் சொல்வதுபோல் இப்போதுதான் அதிகமாகக் குரல் கொடுக்க வேண்டும். அதற்கான நேரம் இதுதான். நிச்சயம் குரல் கொடுப்போம். மாவீரன் சீமான் போன்றவர்கள் பேசிக் கொண்டுதான் இருக்கிறார்கள். இனிமேலாவது தமிழர்களுக்கு சம உரிமை, சம அந்தஸ்து, கொடுத்து நடத்தினால்தான் சிங்களவர்களுக்கு நல்லது. இனி மறுபடியும் ஒரு போராட்டம் வந்தால் - புரட்சி வெடித்தால் இதை விட வேகமாக வரும்.

கே - ஐ.நா.வின் போர் குற்ற விசாரணைக்கு இலங்கைக்கு ஆதரவாக இந்தியா ஓட்டு போட்டிருக்கிறதே?

ப - மிகவும் வேதனையான விடயம் இது. இதைச் செய்ய எப்படி மனது வந்தது என்று தெரியவில்லை. இதைப் பற்றி வெளிப்படையாக இங்கிருப்பவர்கள் பேச முடியாத சூழ்நிலை. ஈழத் தமிழர்களுக்கு கண்ணுக்குத் தெரிகின்ற முள் வேலி என்றால், நமக்கு கண்ணுக்குத் தெரியாத சட்டம் என்கின்ற வேலி தடுக்கிறது.

எந்த ஒரு விடயமும் விடுதலையை நோக்கித்தான் போகும். மனதிலிருந்து விடுதலை தேடுவதுதான் ஆன்மீகம். அதாவது மனவிடுதலை. அதேபோல ஈழத்தில் தேவை இன விடுதலை. அதற்காக எந்த ரூபத்திலாவது போராட்டம் வெடித்துக் கொண்டுதான் இருக்கும் - என்றார்.

# நக்ஸலைட்டுகளின் ஊடுருவலைத் தடுக்க தமிழக எல்லையில் பொலிஸ் உஷார்நிலை

## ரயில்களுக்கு கூடுதல் பாதுகாப்பு

சென்னை, ஜூன் 23

தமிழகத்தில் நக்ஸலைட்டுகளின் ஊடுருவலைத் தடுக்க பொலிஸார் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தில் இருந்து வடமாநிலங்களுக்கு செல்லும் ரயில்களுக்கு கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

மேற்கு வங்க மாநிலத்தில் மாவோயிஸ்ட் நக்ஸலைட் தீவிரவாதிகள் 50 கிராமங்களை ஆக்கிரமித்து கொண்டனர். ஆக்கிரமிக்கப்பட்ட கிராமங்களை மீட்க துணை இராணுவப் படையினர் மாவோயிஸ்ட்டு தீவிரவாதிகளுடன் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபட்டுள்ளனர்.

மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்கும், ஆந்திர நக்ஸலைட்டுகளுக்கும் தொடர்பிருப்பதால் ஆந்திரா வழியாக நக்ஸலைட்டுகள் தமிழகத்தில் ஊடுருவாமலிருக்க முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

ஆந்திரா, கர்நாடகா எல்லைப் பகுதியில் தமிழகப் பொலிஸார் குவிக்கப்பட்டு வாகனச் சோதனையும் நடத்தப்படுகின்றன. சத்தியமங்கலம் காட்டுப்பகுதி, கொடைக்கானல் காட்டுப்பகுதிகளிலும் அதிரடிப் படை பொலிஸார் தேடுதல் வேட்டையிலும் ஈடுபட்டுள்ளனர்.

ஆந்திர எல்லைப் பகுதியில் அமைந்துள்ள திருவள்ளூர் மாவட்டத்திலும், வேலூர் மாவட்டத்திலும் நக்ஸலைட் தடுப்புப் பொலிஸார் குவிக்கப்பட்டு தீவிர சோதனை நடத்தப்படுகிறது. நேற்றுமுன்தினம் திருவள்ளூர் மாவட்டத்தில் ஆந்திர எல்லைப் பகுதிக்கு தமிழக சட்டம் - ஒழுங்கு கூடுதல் பொலிஸ் டி.ஜி.பி. ராதாகிருஷ்ணன் நேரடியாகச் சென்று பாதுகாப்புப் பணிகளை பார்வையிட்டார்.



பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது - தமிழகத்திற்கு தற்போது நக்ஸலைட்டுகளால் ஆபத்து எதுவும் இல்லை. இருந்தாலும் முன் எச்சரிக்கையாக இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

நக்ஸலைட்டுகளின் ஆதிக்கத்தைக் கண்டித்து வடமாநிலங்களில் முழு அடைப்புப் போராட்டம் நடத்தப்படுகிறது.

இதன் எதிரொலியாக ரயில்களைக் கொளுத்தி நாசவேலையில் ஈடுபடலாம் என்று அனைத்து மாநில அரசுகளுக்கும் மத்திய அரசு எச்சரிக்கைச் செய்தி அனுப்பியுள்ளது.

இதன் பேரில் தமிழகத்தில் உள்ள முக்கிய ரயில் நிலையங்களும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. சென்னையில் சென்ரல், எழும்பூர் ரயில் நிலையங்களில் வழக்கத்தை விட கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. வடமாநிலங்களுக்குச் செல்லும் ரயில்களில் துப்பாக்கி ஏந்திய பொலிஸார் பாதுகாப்புக்காகச் செல்கிறார்கள்.

# மேற்கு வங்கத்தில் மேலும் 17 கிராமங்களை மீட்க பொலிஸ் படை முன்னேறிப் பாய்கிறது!

லால்கர், ஜூன் 23

மேற்கு வங்கத்தில் லால்கர் நகரை மீட்டதைத் தொடர்ந்து நக்ஸலைட்டுகளின் பிடியிலுள்ள மேலும் 17 கிராமங்களை மீட்க பொலிஸ் படை அதிரடியாக முன்னேறி வருகிறது.

மேற்கு வங்க மாநிலத்தில் மாவோ நக்ஸலைட்டுகளும் பழங்குடியினரும் சேர்ந்து அரசுக்கு எதிராக ஆயுதப் போராட்டம் நடத்தி வருகிறார்கள். அவர்கள் லால்கர் நகரம் மற்றும் 50இற்கும் மேற்பட்ட கிராமங்களைக் கைப்பற்றி தங்கள் கட்டுப் பாட்டில் வைத்து கொண்டனர். அங்கிருந்த அதிகாரிகளையும் பொலிஸாரையும் வெளியேற்றினர்.

அவற்றை மீட்க துணை இராணுவம், மத்திய - மாநில பொலிஸார் அடங்கிய படையை மேற்கு வங்க அரசு கடந்த 17ஆம் திகதி லால்கருக்கு அனுப்பியது. இவர்கள் கடந்த சனியன்று லால்கர் நகரை மீட்டனர்.

[illegible] காலை லால்கர் அருகே நக்ஸலைட்டுகள், பழங்குடியினர் பிடியிலுள்ள மேலும் 17 கிராமங்களை மீட்க ராம்கர் நோக்கி பொலிஸார் புறப்பட்டனர். அவர்களுக்கு முன்பாக கண்ணிவெடிகளை கண்டுபிடிக்கும் வாகனம் சென்றது. வழியில் இருந்த 3 கிராமங்களை பொலிஸ் படை கைப்பற்றியது.

அந்தக் கிராமங்களில் பெண்கள், குழந்தைகள் மட்டுமே இருந்தனர். ஆண்கள் வீடுகளை விட்டு வெளியேறி தலைமறைவாகிவிட்டனர்.

நக்ஸலைட்டுகளிடம் சிக்கியுள்ள 25இற்கும் மேற்பட்ட கிராம மக்கள் பட்டினியால் வாடுகின்றனர் எனக் கூறப்படுகிறது.

பொலிஸ் படை கைப்பற்றத் திட்டமிட்டிருக்கும் 17 கிராமங்களில் பொலிஸ் அடக்குமுறை எதிர்ப்புக் கமிட்டியின் அமைப்பாளர் சத்திரதார் மகதாவின் சொந்த ஊரான பராபெலியாவும் அடங்கும்.

லால்கருக்கும் ராம்காருக்கும் இடைப்பட்ட 19 கிலோ மீற்றர் தூரத்தில் பெரும் பகுதி கண்ணி வெடிகள் புதைக்கப்பட்ட காட்டுப் பகுதியாகும். அதைக் கடந்து பொலிஸ் படை வேகமாக முன்னேறி வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டுக்குள் இடம்பெயர்ந்த மக்கள் விரைவில் சொந்த இடங்களில் குடியமர்த்தப்படுவர்

## குருநகர் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 23

யாழ்.குடாநாட்டுக்கு ஏற்கனவே இடம் பெயர்ந்த நிலையில்வாழ்ந்து வருகின்ற மக்கள் அனைவரும், அவர்களது ஜீவனோ பாயம் உறுதிசெய்யப்பட்டு தத்தமது சொந்த இருப்பிடங்களில் வெகு விரைவில் குடியமர்த்தப்படுவார்கள்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா இதனைத் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் யாழ்.குருநகர் புனித ஜேம்ஸ் வித்தியாலய கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:

இதுவரை காலமும் தமிழர் தரப்புத் தலைமைகளால் முன்னெடுக்கப்பட்டு வந்த எதிர்ப்பு அரசியலானது எமது மக்களுக்கு எந்தவிதமான பயன்களையும் பெற்றுத்தரவில்லை. அது எமது மக்களுக்கான அழிவுகளுக்கே துணைபோய் இருக்கின்றது. எமது மக்கள் இன்று அதனை நன்கு உணர்ந்திருக்கிறார்கள். எமது மக்களின் அன்றாட மற்றும் எதிர்கால நலன்களுக்காகவே நாம்




இணக்க அரசியலில் ஈடுபட்டு வருகிறோம்.

எமது மக்கள் பல்வேறு துன்ப துயரங்களுக்கு முகங்கொடுத்து இருந்த போதெல்லாம் நாம் அம் மக்களை தனித்து விட்டுவிட்டு ஓடிப்போகவில்லை. தங்களது சுய லாபங்களுக்காக குறிகிய அரசியல் கொள்கைகளில் வாழ்ந்து வருபவர்கள் மக்களை அழிவுக்குள் தள்ளிவிட்டு ஓடிஒழிந்து கொண்டனர். இப்போது எமது மக்கள் தங்களது துன்ப துயரங்களில் இருந்து மீட்சி பெற நல்லதொரு காலம் உருவாகி வருகின்றது. இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் மீண்டும் எம் மக்களை குழப்பி அதன் மூலம் தங்களது சுயலாப அரசியலை முன்னெடுப்பதற்கு சிலர் முயற்சித்து வருகின்றனர் -என்றார்.

அமைச்சரின் மக்கள் தொடர்பாளர் சில்வெஸ்ட்ரீன் யூட் அலென்ரின் உதயன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி கூட்டத்தில் புலவர் அரியரட்ணம் அகஸ்ரின் மாஸ்ரர், பசுபதி சீவரட்ணம், சந்திரமோகன், கிராமசேவையாளர் யூலன் உட்பட பலர் கலந்து கொண்டு உரையாற்றினர். பெரும் எண்ணிக்கையான மக்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர். (அ)

# யாழ்.வந்த பயணிக்கு எதுவித தொற்று நோயும் இல்லை

## யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் அறிவிப்பு

பன்றிக் காய்ச்சல் தொற்றுக்குள்ளாகியவர்களுடன் ஒரே விமானத்தில் பயணித்து யாழ்.மாவட்டத்துக்கு வந்திருந்த பயணிக்கு எவ்வித தொற்று நோய் அறிகுறிகளும் இல்லை எனவும் இவரை தனிமைப்படுத்தலிலிருந்தும், கண்காணிப்பிலிருந்தும் விடுவிப்பதாவும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட் டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளவை வருமாறு:-

அண்மையில் அவுஸ்திரேலியாவிலிருந்து இலங்கைக்கு வருகை தந்த நால்வருக்கு பன்றிக்காய்ச்சல் நோய் இருப்பது கொழும்பில் கண்டுபிடிக்கப்பட்டது. இதனை அடுத்து இந்நோய் இலங்கையில் பரவாமல் தடுக்கும் நோக்குடன் இனங்காணப்பட்ட நோயாளர்களுடன் சிங்கப்பூரிலிருந்து கொழும்பிற்கு ஒரே விமானத்தில் பயணம் செய்து இலங்கை வந்தடைந்த அனைவரை யும் தனிமைப்படுத்தி கண்காணிக்குமாறு சுகா தார அமைச்சின் தொற்றுநோய் தடுப்புப் பிரிவு எமக்கு பணித்திருந்தது.

அதன் அடிப்படையில் யாழ்.மாவட் டத்துக்கு வருகை தந்த பயணி ஒருவர் அவரது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வந்தார். இவரிடம் எதுவிதமான நோய் அறிகுறிகளும் காணப்படவில்லை. எனவே இன்று சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்புப் பிரிவின் அறிவுறுத்தலுக்கமைய இவரைதனிமைப்படுத்தலிலிருந்தும்கண்காணிப்பிலிருந்தும் விடுவிக்கிறோம். இவர் மூலம் பன்றிக் காய்ச்சல் எவருக்கும் தொற்ற வாய்ப்பில்லை என்பதனை பகிரங்கமாக அறியத்தருகின்றோம் - என்றுள்ளது. (04)

# குடாநாட்டில் மீன்பிடித் தடை நீக்கப்பட்டதால்

## விசைப்படகில் தொழிலுக்குச் செல்லும் வடமராட்சி மீனவர்கள்

கரவெட்டி, ஜூன் 23

குடாநாட்டில் இதுவரை காலமும் அமுலில் இருந்த மீன்பிடித்தடை நீக்கப்பட்டதைத் தொடர்ந்து கடந்த இருநாள்களாக வடமராட்சிப் பகுதி மீனர்கள் விசைப்படகுகளைப் பயன்படுத்திக் கடற்றொழிலில் ஈடுபட்டு வருவதாக வடமராட்சி கடற்றொழிலாளர்களின் சமாசத் தலைவர் எஸ். எமிலியாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த பல வருடங்களாக விசைப் படகுகள் பயன்படுத்தப்படாமையால் அவற்றின் இயந்திரங்களை உடனடியாக இயக்க முடியாதுள்ளது. அத்தோடு தொண்டைமானாறு தொடக்கம் பருத்தித்துறை வரையிலான கடற்பரப்பில் ஒருசில விசைப்படகுகளே கடற்றொழிலில் உடனடியாக ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

விசைப்படகுகளைப் பயன்படுத்துவதால் அதிகளவு மீன்கள் பிடிபடுகின்றன. இவற்றினை ஏ-9 வீதியூடாகத் தென்பகுதிக்குக் கொண்டு சென்று விற்பனை செய்வதற்கும் அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டும்.

இது வரை காலமும் 30 ஆயிரம் ரூபா தொடக்கம் 35 ஆயிரம் ரூபா வரை விற்பனை செய்யப்பட்ட விசைப்படகுகளின் விலை ஒரு லட்சம் ரூபா வரை உயர்ந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடமராட்சிக் கடலில் 24 மணி நேரமும் தொழில் செய்ய மீனவர்கள் அனுமதிக்கப்பட்டாலும் மாலை 6 மணிக்குள் மீனவர்கள் கரைக்கு வந்துவிட வேண்டும் அவ்வாறு ஆறு மணிக்குள் கரை திரும்பத் தவறும் மீனவர்கள் இரவு முழுதும் கடலில் தங்கி அடுத்த நாள் காலையே கரை திரும்ப முடியும் என்றும் சமாசத் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-70)

# நயினாதீவில் உற்சவகாலத்தையொட்டி

## 22 படகுகள் சேவையில்

நல்லூர், ஜூன் 24

நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலய உற்சவகாலத்தில் சேவையில் ஈடுபட பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடியது என அத்தாட்சிப்படுத்தப்பட்ட 22 படகுகள் இன்று முதல் சேவையில் ஈடுபடுத்தப்படும்.

நேற்று திங்கட்கிழமை முதலே பயணிகள் உயிர்காப்பு அங்கிகள் அணிந்தே தமது பயணத்தை மேற்கொள்ள அனுமதிக்கப் பட்டனர்

இதே சமயம் ஆலயச் சூழலில் மின் வெளிச்சத் தடைகள் ஏற்படாதவாறு செயற் படுத்த நேற்று முன்தினம்இரண்டு மின்பிறப்பாக்கிகள் நயினாதீவுக்கு ஏடுத்துவரப்பட்டுள்ளன. (111)

# இலங்கையின் தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு குடிவரவு நடவடிக்கைகளை கனடா துரிதப்படுத்துகின்றது

கொழும்பு, ஜூன் 23

இலங்கையின் தற்போதைய நிலவரத்தை கருத்தில்கொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கான குடிவரவு நடவடிக்கையை கனடா தற்போது துரிதப்படுத்தியிருக்கின்றது.

கனேடியக் குடிமக்கள், நிரந்தர வதிவிட உரிமையைக் கொண்டிருப்போர் மற்றும் இலங்கையில் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களை கொண்டிருக்கும் பாதுகாக்கப்பட்ட நபர்கள் (கணவன் அல்லது மனைவி, பொதுவான சட்ட ரீதியான பங்காளிகள், பெற்றோர்கள், பாட்டன், பாட்டி, நிராதரவான குடும்ப உறுப்பினர்கள்) ஆகியோர் தற்போதைய மனிதாபிமான நிலவரத்தில் நேரடியாகவும் அல்லது குறிப்பிட்டத்தக்க அளவிலும் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்கள் கனடா குடியுரிமை, குடிவரவுப் பிரிவுக்கு அறிவிக்க முடியும்.

இது தொடர்பான அறிவிப்பை கனேடிய குடிவரவுப் பிரிவு கடந்த 3 ஆம் நாள் அறிவித்திருந்தது.

இலங்கையின் நிலவரம் தொடர்பான விடயங்களை ஆராயும் நிலையங்களும் கொழும்பில் உள்ள கனேடிய தூதரகமும் புதிய மற்றும் தற்போதுள்ள விண்ணப்பங்களைத் பரிசீலனை செய்யும் நடவடிக்கைகளை துரிதமாக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அனுசரணை வழங்குபவர்கள் திணைக்களத்துக்கு அறிவித்தால் கனடிய குடிவரவு குடியுரிமை திணைக்களம் தற்போதுள்ள குடும்ப மட்ட விண்ணப்பங்களை துரிதப்படுத்தும்.

குடும்ப உறுப்பினர்கள் இலங்கையின் நிலவரத்தால் பாதிக்கப்பட்டிருப்பதாக சுயமாக அடையாளப்படுத்திஞல் இந்த விண்ணப்பங்களை துரிதமாக்கும் அதேவேளை, விண்ணப்பதாரியும் விண்ணப்பம் தொடர்பான தீர்மானத்தை கொழும்பில் உள்ள விசா அலுவலகமோ அல்லது அழைப்பு நிலையமோ கனேடிய குடிவரவு குடியுரிமை நிலையங்களோ தீர்மானிக்க மாட்டாது.

தாம் அனுசரணை வழங்கிய உறவினர்கள் அல்லது தங்களில் தங்கியிருக்கும் இலங்கையில் தற்போது இருந்தால் அவர்கள் தற்போதைய சூழ்நிலையில் பாதிக்கப்பட்டிருந்தால் கனடாவின் அழைப்பு நிலையத்துக்கு அறிவிக்க முடியும்.

அனுசரணை வழங்குவோரும் கனடாவில் உள்ள விண்ணப்பதாரிகளும் கொழும்பில் உள்ள தூதரகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தமது உறவினர்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

இடம்பெயர்ந்த குடும்ப உறுப்பினர்களுடன் தொடர்பு கொள்ளும் நடவடிக்கையை விசா அலுவலகம் மேற்கொள்ளாது.

வடபிராந்தியத்தில் உள்ள முகாம்களுக்கு விசா அதிகாரிகள் செல்லமாட்டார்கள். அதேசமயம், நிரந்தர வதிவிட உரிமையுடைய விசா விண்ணப்பதாரிகள் சிறிலங்கா அதிகாரிகளிடம் இருந்து பயணச்சீட்டு அனுமதியை பெற்றுக்கொண்டு கொழும்புக்கு பயணம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள்.

ஆயினும், இந்த நடவடிக்கைகளுக்கு விசா அதிகாரிகள் அனுசரணை வழங்க மாட்டார்கள்.

அனுசரணை வழங்கும் ஒருவர் கனேடிய குடிவரவு குடியுரிமை திணைக்களத்துடன் [illegible] க்கப்பட்ட விண்ணப்பதாரி களின் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை கொடுத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அனுசரணை விண்ணப்பாதரிகளும் தங்கியிருப்போரும் மருத்துவப் பரிசோதனைக்காக கொழும்பில் இருக்க வேண்டிய தேவை உள்ளது.

தேவைப்பட்டால் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். அதேசமயம், அவர்கள் குடிவரவு அகதி பாதுகாப்பு சட்ட மூலத்தின் பிரகாரம் தேவைப்படுவனவற்றை நிறைவேற்றக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

பாதுகாப்பு சோதனைகளும் இதில் உள்ளடங்கியிருக்கும். மனிதாபிமான மற்றும் பரிவிரக்கத்தன்மையான காரணிகளும் பரிசீலிக்கப்பட முடியும். அவை தொடர்பாக விசா அலுவலகத்தின் கவனத்துக்கு கொண்டுவரப்பட வேண்டும்.

கனேடிய குடிவரவு அகதிகள் பாதுகாப்புச் சட்டமூலத்தில் தேவைப்படுவனவற்றை பூர்த்தி செய்யக்கூடிய இலங்கை விண்ணப்பாதாரிகளுக்கு விசா அதிகாரிகள் தொடர்ந்து நிரந்தர மற்றும் தற்காலிக வதிவிட விசாக்களை வழங்குவோர்கள்.

இதேசமயம், விண்ணப்பம் தொடர்பாக எப்போது இறுதி முடிவு செய்யப்படும் என்பது குறித்து உத்தரவாதம் இல்லை.

கனேடிய குடிவரவு குடியுரிமைகள் திணைக்களம் நிலைமையை மிகவும் நெருக்கமாக அவதானித்து வருகிறது.

மனிதாபிமான ரீதியாகவும் தளர்வுப் போக்குடனும் தொடர்ந்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்த விண்ணப்பங்களை துரிதமாக பரிசீலனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அனுசரணையாளரிடம் கனடாவில் உள்ள நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருக்கும் விண்ணப்பாதரிகளும் இலங்கையில் உள்ள தமது விண்ணப்பதாரிகள் குறித்து அறிவிக்க வேண்டும். அவர்கள் இலங்கை நிலவரத்தால் பாதிக்கப்பட்டுள்ளார்களா என்பது குறித்து தெரிவித்திருக்க வேண்டும்.

கனேடிய குடிவரவு குடியுரிமை அழைப்பு நிலையத்துக்கு இது தொடர்பாக அறிவிக்க வேண்டும்.

தற்போதைய சூழ்நிலையின் பிரகாரம் விண்ணப்பதாரிகள் இடம்பெயர்ந்திருந்தால் விசா அலுவலகம் அவர்களுடன் தொடர்பை மேற்கொள்வது கடினமாகும். சாத்தியமான அளவுக்கு துரிதமாக தாங்கள் இங்கே இருக்கின்றார்கள் என்பதற்கு விண்ணப்பதாரிகள் கொழும்பில் உள்ள விசா அலுவலகத்துக்கு அறிவிக்க வேண்டும்.

# கண்ணீர் அஞ்சலி

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட் தந்தை

## மரிசால் பிள்ளை நோபேட் சீமான் பிள்ளை அடிகள்



கடந்த 30 ஆண்டுகளாக யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய மறைமாவட்டங்களில் இறைபணியாற்றிய எமது அன்புக்குரிய தந்தையின் ஆன்ம இளைப்பாற்றிற்காக எல்லாம் வல்ல ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றோம். அடிகளார் 20.06.2009 மாரடைப்பால் காலமான செய்தி எம்மை ஆழாத் துயரில் ஆழ்த்தியுள்ளது. இவரது குடும்ப அங்கத்தவர்களுக்கும் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் ஏற்பட்ட இப்பேரிழப்பில் நாமும் இணைந்து அன்னாருக்கு ஆழ்ந்த அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

6/1, மார்ட்டின் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

திருமதி ஆ.மரியநாயகி குடும்பம்
தனபாலசிங்கம்-(பாமா) குடும்பத்தினர்

# 10ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

சிவஸ்ரீ யோகீஸ்வரக்குருக்கள் (ராஜாஜி)
அவர்களின் பாசமிகு மனைவி

## திருமதி இராஜேஸ்வரி அம்மா



கடந்த 14.06.2009 ஞாயிறு காலமான செய்தி கேட்டு திருநெல்வேலி தலங்காவல் பிள்ளையார் கோயில் அடியார்கள் ஆகியநாம் ஆழ்ந்த துயரம் கொண்டுள்ளோம், அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது இரங்க லைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய வேண்டியும் தலங்காவலன் பாதம் தொழுது பிரார்த்திக்கின்றோம்.

அம்மன் வீதி,
திருநெல்வேலி.

செ.சிவலிங்கம் குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்.





யாழ்.மாநகர சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்ய ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன யாழ்.செயலகத்துக்கு வந்த போது அவரை அரச அதிபர் வரவேற்பதையும் வேட்பு மனுத்தாக்கல் செய்வதற்காக ஜயலத்தும் சத்தியேந்திராவும் தேர்தல் அலுவலகத்துக்குள் செல்வதையும் படங்களில் காணலாம். (படங்கள்: அதிரன், ஓங்காரன்)

## காயமுற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வியக்கத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை நடத்தி வரும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவை இந்த விடயம் தொடர்பிலும் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை முல்லைத் தீவு வெள்ளமுள்ளிவாய்க்கால் பகுதியில் இராணுவத் தளபதி தலைமையில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போது செய்தியாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அங்கு கருத்துத் தெரிவித்துள்ள இராணுவத் தளபதி மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

வடக்கில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல்களின்போது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களில் 27ஆயிரம் படைவீரர்கள் படுகாயங்களுக்கு உள்ளாகினர். அத்துடன், அவர்களுள் 6ஆயிரம் பேர் அங்கவீனமடைந்தனர்.

இவ்வாறான சூழ்நிலையில் படையினர் நடத்திய தாக்குதல்களின் போது காயமடைந்த புலி உறுப்பினர்கள் எங்கே என்பது கேள்விக்குரிய விடயமா கிறது. இவ்வாறு காயமடைந்த புலி உறுப் பினர்கள் அனைவரும் அவர்களின் தலை மைத்துவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்பதே உண்மையாகும். அதனா லேயே காயமடைந்த புலி உறுப்பினர்கள் எவரும் படையினரால் கைது செய்யப்பட வில்லை.

போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசின் மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அது தொடர்பில் விசாரணைகளை நடத்தி வரும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவை முதலில் இவ்விடயம் தொடர்பிலும் கவனம் செலுத்தி விசாரணைகளை நடத்த வேண்டும். அதன் பின்னர் அரசின் மீதான குற்றச்சாட்டுத் தொடர்பில் விசாரிக்க வேண்டும் - என்றார்.(அ-சி)

## அரசுடன் கூட்டா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழுத்தம் கொடுத்து வருவதாக செய்திகள் வெளியாகியிருந்தமை தெரிந்ததே.

எனினும் தனித்துப் போட்டியிட்டுத் தமது கட்சியின் தனித்துவத்தைத் தொடர்ந்து பேணுவதில் ஈ. பி.டி.பி. தலைமை மிக உறுதியாக இருப்பதாக அக்கட்சி வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

எனினும் அரசுத் தலைமையோடு நெருங்கிய தொடர்புகளைப் பேணுவதாகக் கருதப்படும் 'ஏஸியன் ட்ரிபியூன்' இணையத்தளம் இவ்விடயத்தை ஒட்டி நேற்று வேறுவிதமாகச் செய்தி வெளியிட்டிருந்தது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி. இத் தேர்தல்களில் அரசுக் கூட்டமைப்புப் பட்டியலில் போட்டியிடுகின்றது என அந்த இணையத்தளம் தெரிவித்துள்ளது.

வவுனியா நகரசபையைப் பொறுத்தவரை 11 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக ஒவ்வொரு அணியும் தலா 14 பேர் கொண்ட வேட்பாளர் பட்டியலைச் சமர்ப்பிக்க வேண்டும்.

இதன்படி -

வவுனியா நகரசபைக்கான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் (அரசுத் தரப்புக் கூட்டமைப்பின்) வேட்பாளர் பட்டியலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் மூவரும், 'ரெலோ' என்ற பெயரில் இயங்கும் அணி சார்பில் இருவரும், ஈ.பி.டி.பி. சார்பில் அறுவரும், ஆர். பிரபாகரன் என்பவர் தலைமையில் இயங்கும் ஈரோஸ் சார்பில் மூவருமாக மொத்தம் 14 வேட்பாளர்களை நிறுத்த இணக்கம் காணப்பட்டுள்ளதாக அந்த இணையத்தளம் மேலும் தெரிவித்தது.

எனினும், யாழ். மாநகரசபையைப் பொறுத்தவரை இத்தரப்புக்களும் ஒரே அணியில் - பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பட்டியலில் - போட்டியிடுவதற்கு இணக்கம் கண்டுள்ள போதிலும் வேட்பாளர்களின் எண்ணிக்கை ஒதுக்கீட்டில் நேற்றுவரை பெரும் இழுபறி நிலைமை நிலவியதாக அந்த இணையத்தளம் மேலும் குறிப்பிட்டது.

யாழ். மாநகரசபைக்கு 23 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக மொத்தம் 29 வேட்பாளர்களைக் கொண்ட பட்டியலை ஒவ்வொரு அணியும் தாக்கல் செய்ய வேண்டும்.

இந்த 29 வேட்பாளர்களில் இருபது இடங்களை ஈ.பி.டி.பி. கோருகின்றது. ஆனால், ஸ்ரீல.சு.க. மூன்று இடங்களையும், 'ரெலோ' மற்றும் 'ஈரோஸ்' பெயர்களில் இயங்கும் அமைப்புகள் தலா ஆறு இடங்களையும் கோருவதனால் மிச்சமாக ஈ.பி.டி.பிக்கு 14 இடங்களே கூட்டணிக்குள் கிடைக்கும் சூழல் காணப்படு கின்றது.

இந்த இழுபறி நிலையை ஜனாதிபதியின் பிரதம ஆலோசகரும் எம்.பியுமான பஸில் ராஜபக்ஷ நேற்று யாழ்ப்பாணத்தில் நேரில் பிரசன்னமாகித் தீர்த்து வைக்க இருந்தார் என எதிர்பார்க்கப்பட்டதாக அந்த இணையத்தளம் மேலும் குறிப் பிட்டது.

இதேவேளை -

வீ. ஆனந்தசங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி, த. சித்தார்த்தன் தலைமையிலான புளொட் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். (பத்மநாபா) அணி ஆகியன ஒரே கூட்டணியில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடவுள்ளன என்பது தெரிந்ததே.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இம்முறை தமிழரசுக் கட்சியின் பட்டியலில் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடவுள்ளது.(அ-சி)

## உள்ளூராட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நண்பகல் வரை ஏற்றுக்கொள்ளப்படவுள்ளன.

பிரதான அரசியல் கட்சிகள் வேட்பு மனு ஏற்கப்படும் இறுதித் தினத்தில் தமது வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யத் திட்டமிட்டுள்ளன.

இதனால் விசேட சோதனைச் சாவடிகள் அமைக்கவும் பொலிஸாரைரோந்துப் பணியில் ஈடுபடுத்தவும் திட்டமிட்டிருப்பதாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்தது.

வேட்பு மனு ஏற்கப்படும் இறுதித் தினத்தில் இருந்து தேர்தல் தினம் வரை விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

வேட்பு மனுக்கள் ஏற்கப்படும் இறுதித் தினங்களான நாளை மற்றும் நாளை மறு தினம் மாவட்டச் செயலகங்களுக்கு அருகிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் கூடுதல் பாதுகாப்பு வழங்க ஒழுங்குகள் செய்யப்பட உள்ளன எனப் பொலிஸ் செயலகம் தெரிவித்தது.

## நலன்புரி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள 4000க்கும் அதிகமான மக்களுக்கு பார்வைக் குறைபாடு, 'கற்றாக்ற்' மற்றும் ஏனைய கண் தொடர்பான நோய்கள் ஏற்பட்டிருப்பதை கண்டறிந்துள்ளோம். எனவே சுகாதார அமைச்சின் மூலம் பாதிப்புற்றோருக்கு விசேட சிகிச்சைகளை யும் ஆலோசனை களையும் வழங்கி வருகிறோம்.

கண்தொடர்பான நோய்கள் முற்றிய நிலையில் காணப்படுப்வர்கள் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உரிய சிகிச்சைகள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன - என்று அவர் தெரிவித்துள்ளார். (சி)

## வவுனியா நலன்புரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டுள்ளது.

அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளோரின் பெயர்ப் பட்டியல் இக் காரியாலயங்களில் மக்களின் பார்வைக்காக வைக்கப்படும்.

### 1500 பேர் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்

இவர்களில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 1500 பேர் அடங்குகின்றனர். இம் முதியவர்களைப் பொறுப்பேற்று பராமரிக்க விரும்பும் அந்த முதியவர்களது உறவினர்களின் வசதி கருதி யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த முதியவர்களது பெயர் விவரப்பட்டியல் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை முதல் யாழ்ப் பாணத்தில் அமைந்துள்ள சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரின் யாழ். பணிமனையில் வைக்கப்பட் டிருக்கும்.

இடம்பெயர்ந்தோர் நலன்களுக்குப் பொறுப்பான மேஜர் ஜெனரல் சந்திரசிறி தலைமையில் நேற்று நடைபெற்ற நிகழ்வின் போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பின் பேரில் முதியவர்களுக்கான அமைச்சின் பணிப்பாளர் கோணேஸ்வரன், அமைச்சரின் மன்னார் வவுனியா மாவட்டங்களுக்கான இணைப்பாளர் இளையதம்பி ஹரிச்சந்திரா ஆகியோர் கலந்து கொண்டு மேற்படி 9,247 முதியவர்களைப் பொறுப்பேற்றுள்ளனர். (அ)

## யாழ்ப்பாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முற்பகல் 11 மணியளவில் யாழ்.செயலகத்தில் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவுடன் யாழ். மாநகர சபையின் பிரதம வேட்பாளர் ஏ.ஏ.எஸ்.சத்தியேந்திராவும் யாழ். செயலகத்துக்கு வருகை தந்திருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் 29 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இவர்களில் 28 தமிழர்களும் முஸ்லிம் ஒருவரும் உள்ளடங்குகின்றனர். நான்கு பெண் வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர்.

வேட்பாளர்கள் அனைவரும் யாழ்ப்பாணத் தைச் சேர்ந்தவர்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்தார்.

பிரபல வர்த்தகரான ஏ.ஏ.எஸ். சத்தியேந்திரா தலைமையிலான அணி ஐ.தே.க சார்பில் தேர்தலில் களமிறங்குகின்றது எனவும் அவர் கூறினார். (அ-50)

## பயங்கரவாதச்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது கடுமையாகத் தாக்கப்பட்டார் என நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்தார்.

பத்மநாதஐயர் ஸ்ரீஸ்கந்தராஜா என்ற இளைஞரே குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று கொழும்பு பிரதம நீதிவான் நிஷாந்த ஹப்பு ஆராய்ச்சி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் மேற்படி முறைப்பாட்டைத் தெரிவித்தார்.

ஒரு புத்தகத்தைத் தமது தலையின் மேல் வைத்து, அந்தப் புத்தகத்தின் மீது பொல்லால் தாக்கினார்கள் என்றும், தம்மைக் கட்டிப்போட்டு நையப் புடைத்தார்கள் என்றும், இதனால் தமக்குப் பெரும் வருத்தமும், நோவும் ஏற்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தச் சந்தேக நபரை சட்டவைத்திய அதிகாரியின் சோதனைக்கு உட்படுத்தி வைத்திய அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்கப் பணித்த நீதிவான், சந்தேக நபரை அடுத்த மாதம் 2 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கவும் உத்தரவிட்டார். நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்பாளர்கள் எவரும் பிரசன்னமாகி யிருக்காததால் சிங்களச் சட்டத்தரணி ஒருவரே மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றினார். (அ-சி)

தர்மா மற்ஸ் அக்கடமி
சங்கானை
கணிதபாட விசேட வகுப்புக்கள்
தரம் 6 முதல் O/L வரை
கணிதபாடத்தில் சித்தியடையத் தவறிய மாணவர்களுக்கான விசேட வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
ஆசிரியர் K.S. தர்மா

Engineer-MCSE
★Microsoft நிறுவன அதிபர் Bill Gates இன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர Engineer தகமை.
★செயன்முறையுடன் கூடிய வகுப்புக்கள்
★வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்.
★Network Manager, Adminstrator,System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
★USA,UK, பெங்களூர் பல்கலைக்கழகங்களில் BSc,MSc தேர்ச்சி பெறும் அனைவருக்கும் Student Visa,
Work Permit Carrier Guidance
Free Diploma in Hardware Technology, (Installation,Configuration,Printers, Trouble Shooting ,Networking,Assembling) 6 Month Duration
பதிவுகள் 27.06.2009 முன் நேரில்
MCS Supported By UNDP/JRRP
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
பரமேஸ்வரா சந்தி அருகில், Bus Route - 764

பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவில்லையா ! நீங்களும் பட்டதாரி ஆகலாம் .....
அனைத்து துறைகளிலும்
இந்தியாவில் பட்டப்படிப்பு
July 1st week கல்வி ஆண்டு ஆரம்பம்
HINDUSTAN COLLEGE OF ARTS AND SCIENCE Affiliated To MADRAS UNIVERSITY
A/L அனைத்து துறை மாணவர்களுக்கு...
UNDER GRADUATE PROGRAMME (Full time - 3yrs)
B.Sc. - Biochemistry,
B.Sc .- Electronics & Communication Science,
B.Sc. - Microbiology ,
B.Sc. - Biotechnology,
B.Sc. - Computer Science,
B.Sc. - Information Systems Management,
B.Sc. - Electronic Media,
B.Sc. - Visual Communication)
B.Com. (General)
B.C.A
B.B.A
POST GRADUATE PROGRAMME
M.Sc.
(Information Technology, Computer Science, Applied Microbiology, Biotechnology, Bioinformatics, Electronic Media)
M.A
Public Relations
A/L Arts படித்த மாணவர்களும் வர்த்தக (BBA,B com) கணனி (BCA) துறைகளில் பட்டப்படிப்பைத் தொடரும் வாய்ப்பு
10 நாட்களில் அனுமதி பெற்றுத்தரப்படும்.
SONA COLLEGE OF TECHNOLOGY
Sona Nagar, Salem - 636005, Tamilnaadu, India
APPROVED BY AICTE, AFFILIATED TO ANNA UNIVERSITY & ISO CERTIFIED
A/L கணித துறை மாணவர்களுக்கு பொறியியல் கற்கைகள்...
COURSES OFFERED
B.E / B. Tech. Degree [Full time – 4 yrs]
B.E. - Civil Engineering
B.E. - Mechanical Engineering
B.E. - Computer science & Engineering
B.E. - Electrical & Electronics Engineering
B.E. - Electronics & Communication Engineering
B.Tech - Information Technology
B.Tech - Fashion Technology
M.E. Degree [Full time – 2yrs]
MBA - Master of Business Administration
MCA - Master of Computer Applications
ELIGIBILITY 3 PASS IN A/L
August 1st week கல்வி ஆண்டு ஆரம்பம்
ADMISIONS ARE GIVEN IN COLOMBO & JAFFNA
V4 Educational Consultancy(Pvt)Ltd
Head Office- #7-1/1, W.A.Silva mawatha, Wellawatte, Colombo-06.
Branch- #274, Pointpedro Road, Aanaippanthi Junction, Jaffna.
Web: http://www.v4edu.com Email: mail@v4edu.com
T.P- 0773867257, 0775936343, 0212228374

DMI ஸ்ரான்லி வீதி, யாழ்.
வந்தோம்! வென்றோம்!! சென்றோம்!!!"
ஜூன் - 27
மீண்டும் ஸ்ரான்லி வீதியில் இணைகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.06.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.